விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 06 சனிக்கிழமை (22.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஜனவரி 8-ல் தேர்தல்

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதி தேரதல் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

வேட்புமனுக்கள் டிசம்பர் 8 ஆம திகதி ஏற்கப்படும் என்று திணைகளம் அறிவித்துள்ளது.

மூன்றாவது தடவையாக ஜனாதப்பதியாகப் பதவி வகிப்பதற்கு வசதியாக பதவியில் உள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதவி காலத்தில் நான்கு வருட காலம் முழவடைந்ததையடுத்து, தேர்தல் நடத்தப்படுவதற்கான பிரகடனத்தை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்தே தேர்தல்திணைக்களம் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவித்திருக்கினறது. (செ-11)

## பொது வேட்பாளராக மைத்திரிபால தெரிவு


# 'ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன்'

100 நாளில்

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எதிரணிகளின் பொது வேட்பாளராக ஆளும் கூட்டணியின் முக்கிய கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

24 ஆம் பக்கம் பார்க்க



## அமைச்சர்களின் பதவிகள் பறிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற ஆளும் கட்சியின் உறுப்பினர்களது பதவிகள் உடனடியாக அமுலுக்கும் வரும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பறிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த

24 ஆம் பக்கம் பார்க்க

# எனது அரசியல் ஆபத்தானது மகிந்த என்னை கொல்லலாம்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நான் மீண்டும் அரசியலில் பிரவேசிப்பது ஆபத்தானது. என்னை மகிந்த கொன்று விடுவார் என்று எனது பிள்ளைகள் அச்சப்படுகின்றனர். எனினும் நாட்டுக்காக எனது கட்சியினர் மேற்கொண்டுள்ள ஆக்கபூர்வமான அரசியல் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க நான் முன்வந்துள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

24 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவுக்கான பிரதி தூதுவராகிறார் சிசன்



(நியூயோர்க்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் பிரதி தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ளார்.

ஐ.நாவுக்கான அமெரிக்காவின்

24 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவனை கைது செய்ய முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட கலைப்பிரிவின் ஊடக கற்கை பிரிவு மாணவன் ஒருவருடைய வீட்டை சுற்றிவளைத்த புலனாய்வாளர்கள் குறித்த மாணவனை கைது செய்ய முற்பட்ட சம்பவம் ஒன்று நேற்றிரவு 7 மணிக்கு இடம்பெறறுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில்

24 ஆம் பக்கம் பார்க்க

## மன்னிப்பு கோரினார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

18-ம் திருத்தச் சட்டத்திற்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாக மீன்பிடித்துறை மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டு

24 ஆம் பக்கம் பார்க்க

## கட்சி தாவக் காத்திருப்போர்

### நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியல்

(கொழும்பு)

ஆளும கட்சியில் இருந்து எதிர்க் கட்சிக்கு தாவ காத்திருக்கும் முக்கியஸ்தர்களின் பட்டியல் ஒன்று எதிர்க்கட்சியின் முக்கிய அரசியல் வாதி ஒருவரின் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தற்போதைக்கு நாடாளுமன்ற அங்கத்தவர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் விரைவில் வெளியாகவுள்ளது.

மாவட்ட அடிப்படையில் கட்சி தாவ காத்திருப்போரின் பெயர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பொலநறுவை மாவட்டம**

1. மைத்திரிபால சிறிசேன (ஏற்கெனவே கட்சி தாவி விட்டார்)
2. சிறிபால கம்லத்

**அநுராதபுரம் மாவட்டம்**

3. துமிந்த திசாநாயக

**குருநாகல் மாவட்டம்**

4. எஸ்.பி.நாவின்ன
5. நில்வலா விஜேசிங்க
6. சாலிந்த திசாநாயக்க

24 ஆம் பக்கம் பார்க்க

## புதிய ஆட்சி அமைவில் பாதுகாப்பு அமைச்சராக சரத்!

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தை தோறகடித்த பின் ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சு உட்பட முக்கிய பொறுப்புகளும், மேலும் ஒரு அமைச்சும் ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன் சேகாவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் தலைவர்கள் இடையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் படி பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதிக்குரியது.

சரத் பொன்சேகாவின் இராணுவ ஜெனரல் பட்டம், ஓய்வூதியம் உட்பட அவருக்கு இருந்த சகல கௌரவங்களையும் மகிந்த அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

அத்துடன் அவரது குடியுரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அடுத்து ஆட்சியமைக்கும் அரசாங்கம் 72 மணிநேரத்திற்குள் பொன்சேகா

24 ஆம் பக்கம் பார்க்க

## மரணதண்டனையில் மாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கான தண்டனையில் மாற்றம் இல்லை என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் கமலினி

24 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையான தமிழக மீனவர்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பினர்



(சென்னை)

போதை மருந்து கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை நீதிமன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்பு விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரும் நேற்று வெள்ளிக கிழமை காலையில் தங்கள் சொந்த ஊரான ராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்ததைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்தியத் தலைநகர் புதுடில்லி வந்து சேர்ந்தனர். அதற்குப் பிறகு அங்கிருந்து விமானம் மூலம் நேற்று வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை ஒரு மணியளவில் சென்னை சென்றடைந்தனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியில் வந்த மீனவர்கள் யாரும் அங்கே குழுமியிருந்த பத்திரிகையாளர்களிடம் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் திரையிடப்பட்ட ஒரு வானில் ஏற்றி, விமான நிலையத்திலிருந்து நேராக அவர்களுடைய சொந்த ஊரான ராமேஸ்வரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ராமேஸ்வரத்தில் உள்ள தங்கச்சிமடத்தில் இந்த மீனவர்கள் ஐந்து பேரும் கலந்து கொண்ட நன்றிதெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பேசிய மீனவர்கள் தங்களுடைய விடுதலைக்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினர். (செ-11)

# மைத்திரிபாலவுக்கு ஜீ-20 குழு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஜீ-20 குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டால் பூரண ஆதரவளிக்கப்படும் என ஜீ-20 குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக ஜீ-20 குழுவினை ஐக்கிய தேசியக் கட்சி நிறுவியுள்ளது.

இந்தக் குழுவினரே ஜனாதிபதி தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கட்சித் தலைமையகம் சிறிகொத்தாவில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றைய செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு ஆதரவு திரட்டுவது என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டது. (செ-11)

# கரையொதுங்கியது விசித்திர மீன்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் பாரிய அளவிலான விசித்திர மீன் ஒன்று நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறாக இறந்த நிலையில் கரையொதுங்கிய மீனினமானது சுமார் நான்கு அடி நீளமுடையதாக காணப்பட்டது.

அண்மைக்காலமாக கடல் வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்ற நிலையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கரையொதுங்கிய மீனினை அதிகளவிலான பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (செ-11)

**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை அராலியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0772365351

(8400)

# மைலோ கிண்ண கால்பந்து அரையிறுதியாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மைலோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணியும் மெலிஞ்சிமுனை இருதயராசா அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை கட்டுப்பாட்டில வைத்திருந்த நாவாந்துறை சென் மேரிஸ் அணியினர் 3-வது நிமிடத்தில் ஜோன்சன், 23-வது நிமிடத்தில் ஜெனட் 31-வது நிமிடத்தில் நிரோஷன் 45-வது நிமிடத்தில் ஜெனட் பெற்ற கோல்கள் மூலம் அதிரடி காட்டியது.

பதிலுக்கு மெலிஞ்சிமுனை இருதயராசா அணி கோலெதுவும் பெறாமையால் இலகுவாக இப் போட்டியில் வெற்றி பெற்று நாவாந்துறை சென் மேரிஸ் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் நவாலி சென் பீற்றர்ஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியினர் 14-வது நிமிடத்தில் கௌதமன், 28-வது நிமிடத்தில் உமாகரன். 42-வது நிமிடத்தில் கௌதமன் பெற்ற கோல்கள் மூலம் அதிரடி காட்டியது:

பதிலுக்கு நவாலி சென் பீற்றர்ஸ் அணி 35-வது நிமிடத்தில் ஸ்டீபனின் மூலம் கோலொன்றினைப் பெற்றாலும் இப் போட்டியில் 3:1 என்னும் கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த நவிண்டில் கலைமதி அணியினர் 22-வது மற்றும் 24-வது நிமிடத்தில் சிந்துஜன். 31-வது நிமிடத்தில் சந்துரு 38-வது நிமிடத்தில் ரஜனிகாந் பெற்ற கோல்கள் மூலம் அதிரடி காட்டியது.

பதிலுக்கு வேலணை துறையூர் ஐயனார் அணி 32-வது நிமிடத்தில் கோகுலன் மூலம் கோலொன்றினைப் பெற்றாலும் இப் போட்டியில் 4:1 என்னும் கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

நான்காவது காலிறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியும் தெல்லிப்பழை நாமகள் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த குருநகர் பாடும்மீன் அணியினர் 10-வது நிமிடத்தில் கேதீஸ், 33-வது நிமிடத்தில் ஞானப்பிரதாப். 37-வது நிமிடத்தில் ஸ்டீபன் 43-வது நிமிடத்தில் ஞானப்பிரதாப் பெற்ற கோல்கள் மூலம் அதிரடி காட்டியது.

பதிலுக்கு தெல்லிப்பழை நாமகள் அணி கோலெதுவும் பெறாமையால் இலகுவாக இப்போட்டியில் வெற்றி பெற்று குருநகர் பாடும்மீன் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளது.

11.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் குருநகர் பாடும்மீன் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளது . (க-23)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 190/-**

'சிவப்புகரு கூடிய முட்டை பெற்றுக் கொள்ளலாம்'

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

JAFFNA COLLEGE

JAFFNA COLLEGE CEYLON

Cordially Invites you & your friends to its

Christmas Carol Service

"Glory to God in the highest"

On Sunday 23rd November 2014

at 3.30 p.m.

at the Cathedral, Vaddukoddai

principal

(8368)

**குப்பைகள், கட்டிட இடிபாடுகளை அகற்றுதல்**

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் சுகாதாரத்தை பேணும் நோக்குடன் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. எனவே எமது சபையின் வரியிறுப்பாளர்கள் அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

01. டெங்கு பரவுதலை தடுக்கும் முகமாக வீட்டு வளவுகளில் காணப்படும் கட்டிட இடிபாடுகள் எமது சபையினால் இலவசமாக அகற்றித்தரப்படும். இச் சலுகை மூன்று வாரங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:-021 222 2019.

02. வீடுகளில் அகற்றப்படும் குசினிக் கழிவுகள், உக்காத கழிவுகள் மற்றும் அருவருக்கத்தக்க கழிவுகள் என கழிவுகளை வகைப்படுத்தி தனித்தனியாக பைகளில் இடப்பட்டு வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு வகைப்படுத்தப்படாத கழிவுகள் மாநகர சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. இக் கழிவுகள் தவிர்ந்த ஏனைய கழிவுகள் எமது சபையின் கட்டண கழிவகற்றல் பகுதியுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:-021 320 7625/ 071862 8535

ஆணையாளர்

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வன்

அரசரட்ணம் சினேகன்

(170)

யா/சென் பற்றிக்ஸ் பாடசாலையில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் அரசரட்ணம் சினேகன் அவர்களை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:-

அம்மா, அப்பா, சகோதரர், அன்ரிமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்கள்.

யாழ்ப்பாணம். (8401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குரும்பை' குறும்பட வெளியீடு நாளை




(கொழும்பு)

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக வெளிவரும் பீ.சே கலிஸ் இயக்கத்தில் உருவான *குரும்பை* என்னும் குறும்படத்தின் வெளியீட்டு விழா நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு. இல. 286. பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் வாழ்வக நிறுவனத்தின் பிரதித்திட்ட மேலாளர் சைவப்புலவர் கந்தையா பத்மானந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமூகத் தொடர்புகள் ஆணையகத்தின் இயக்குநர் அருட்பணி. ஜே.சி. போல் றொஹான் அடிகளாரும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள். குரும்பை குறும்படத்திற்கான மதிப்பீட்டுரையை மூத்த எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசா வழங்கவுள்ளார்.

(இ-5)

நோயாளர் நலன்புரிச்சங்கம்
ஆதார வைத்தியசாலை-தெல்லிப்பழை

**பணிநிலை வேண்டுகை**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம், நோயாளர்களைப் பராமரிக்கும் தொண்டர்கள் ஆண்/பெண் என்போரிடமிருந்து பணிநிலை வேண்டுகைகளைக் கோரியுள்ளது.

**விண்ணப்ப முடிவு திகதி:-27-11-2014**

விண்ணப்பப்படிவங்களை தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச்சேவை அலுவலகத்தில் 100 ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

லயன் சி.ஹரிகரன்
செயலாளர்
021 300 3455, 077 900 5856

(8396)

LED
Buy same item 10pcs
Get 10% Discount
6 Months Warranty
SPECIAL PRICE FOR WHOLESALE BUYERS


SLIM Panel Light
3w Rs.390/= | 6w Rs.690/=
12w Rs.990/= 18w Rs.1250/=

Rs120/=

PLASTIC LED BULB
3W Rs.120/= | 5W Rs.210/=
7W Rs.260/= | 9W Rs.360/=
12W Rs.420/= | 15W Rs.550/=
18W Rs.750/=

LED Display Board - 6"x 36"
Rs.8250/=




LED Fexible Strip
Light 5metre
Rs.1550/=


LED
Rotating
Bulb
Rs.290/=


LED Aluminum Bulb
3W Rs.230/=
5W Rs.330/=
7W Rs.430/=
9W Rs.630/=


Surface Mounted LED Panel light
3W Rs.690/= | 6W Rs.890/=
12W Rs.1390/= | 18W Rs.1590/=


TV STAND
Rs.7500/=


Size 14-32
Rs.650/=
Please Call
Office Time
Mon-Sat
9:00AM - 6:00PM

SMART
ELECTRONICS (PVT) LTD.
No 65/1, 1st Cross Street, Colombo 11.
Tel : 0112470400 Hotline : 0727949246
www.smartelectronics.lk

Jaffna - 0212223857, 0727949242
Kotahena - 0112396100

(8392)

# இராசி பலன்

22.11.2014
(கார்த்திகை 06, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.02 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 6.27 மணிவரை
விசாகம் பிற்பகல் 2.01 மணிவரை
இராகுகாலம் 9.10-10.40மணிவரை
சுபநேரம் 3.10-4.40 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மேடம்**
குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை, எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்.

**இடபம்**
செய்தொழில் மேன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்**
எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
வாகன சுகமுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி**
நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும்.

**துலாம்**
சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்**
மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றும், குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு**
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயனசுகக் குறைவான நாள், செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உற வினர் வருகையுண்டு, விருந் துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும் முன்னேற்றம் கருதி புதிய திட்டம் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்**
அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்

**யா/கரவெட்டி விக்கினேஸவராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப் பேருரை**



திரு.ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் கற்றல் -கற்பித்தல் அணுகுமுறைகள்

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் கற்றல்- கற்பித்தல் அணுகுமுறைகளாக அனுபவம் சார் கற்றல், விசாரணையை அடிபடையாகக்கொண்ட கற்றல், கூடடாகக் கற்றல், செயற்றிட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பொருத்தமாக ஒன்றிணைத்தல், வகுப்பறைக்கு வெளியிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் சமூகம்சார் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பன இனங் காணப்பட்டுள்ளன.

**பாடசாலைகளில் முன்னெடுக்க வேண்டிய பேண்தகுஅபிவிருத்திக்கான கல்விச்செயற்பாடுகள்**

பெரும்பாலான பாடசாலைகள், பாடசாலைக் சூழலை அழகுபடுத்தலை மாத்திரம் நோக்ககாகக் கொண்டு செயற்படுகின்றன. ஆனால் இதுமட்டும் பேண்தகு அபிவிருத்திக்கான கல்விக்கு உதவப் போவதில்லை. மாறாக மாணவர்களை பயனுள்ள செயற்றிட்டங்களில் ஈடுபடுத்தல், பாடசாலைக் கட்டடங்ளை சூரியப்படல்களுடன் கூடிய பசுமைமிக்க கட்டடங்களாக்குதல், மீழ்சுழற்சி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், நீர்ப்பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றல், பாடசாலையைச்சூழ மரங்களை நாட்டுதல், பாடசாலையில் காய்கறித் தோட்டத்தையும் மூலிகைத் தோட்டத்தையும் அமைத்தல், கலைத்திட்டத்தின் எல்லா விடயங்களிலும், பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்புக்களிருப்பதை உறுதிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள், பேண்தகு அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளாக உலகளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளன.

பேண்தகு பாடசாலை ஒன்றில், பாடசாலைக் கொள்கைகள், பாடசாலை நாட்காட்டி, மாணவர் கழகங்கள், அறிவுப் பரவலாக்கம் மற்றும விழுமியப் பரவலாக்கம், ஜனநாயகச் செயற்பாடுகள், பாடசாலை மைதானம், கற்றல்-கற்பித்தல் முறைகள், வளங்களின் பயன்பாடு, குழுச்செயற்றிட்டங்கள், செயல நிலை ஆய்வுச்செயற்றிட்டங்கள், சமூகத்திற்கான அறிவுப்பகிர்வு மறறும் பல்துறைகளுக்கிடையிலான கற்றல் செயற்பாடுகள் ஆகிய விடயங்களில் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்புக்கள் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பிராந்தியத்தில் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கத்துக்கான சவால்கள**

பிராந்தியத்தில் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கத்தில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கம் தொடர்பான முறையான கொள்கைகள், மற்றும் தூரநோக்குகள் எங்களிடம் போதியளவில் காணப்படவில்லை. கல்விசார் ஆளணியினர் மற்றும் பொதுமக்களிடம் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான போதிய விழிப்புணர்வு இன்னும் ஏற்படவில்லை. கலைத்திட்டத்தில் பொருத்தமாக பேண்தகு அபிவிருத்திக்கானகல்வி வாய்ப்புக்களை உட்புகுத்துவதில் சிரமப்பாடுகள் உள்ளன. சமூகத்துடன் ஒருங்கிணைந்து பேண்தகு அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு இது தொடர்பான பயிற்சி வழங்குவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளல் போன்ற சவால்கள் காணப்படுகின்றன.

**வடக்கு மாகாணத்தில் பேண்தகு அபிவிருத்திக்கான கலவியை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள்**

கல்விசார் ஆளணியினர் மற்றும் பொதுமக்களிடம் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான போதியவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். கலைத்திட்டத்தில் பொருத்தமான இடத்தில், பொருத்தமான கட்டமைப்பில் பேணதகு அபிவிருத்திக்கான கல்வி விடயதானங்களை உட்புகுத்துத்த வேண்டும். எமது சுதேச மற்றும் பாரம்பரிய அறிவையும், தொழில்நுட்பங்களையும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவேண்டும். பொறுப்புக்களைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். மனித ஆற்றலைக் கட்டியெழுப்ப வேண்டும். நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை விருத்திசெய்ய வேண்டும்.

**முடிவுரை**

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடும் தமதுநாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான கலவிமுறையை, கலைத்திட்டத்தை, கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டை வடிவமைத்துக் கொண்டிருக்கும் நிலையில், செயற்படுத்திவரும் நிலையில், நாம் எமது நாட்டின் கல்விபற்றி குறிப்பாக எமது வடக்கு மாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்கள் பற்றியும் அவற்றினை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தற்போதுள்ள கல் விச் செயற்பாடுகளின் இயலுமை மற்றும எதிர்காலத்தில் முன் னெடுக்க வேண்டிய நடவடிக்கை கள் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களை தீர்ப்பதற்கான வழிமுறைகளை நாம் கண்டறியவேண்டும். வடமாகாணத்திலுள்ள பாடசாலைகள. யாழ்பாணப்பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்கல்வி நிறுவனங்கள் கரிசனையுடன் கருமமாற்ற வேண்டும். பொருத்தமான முறையில் சமுதாயக்கல்வி வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் அறிவூட்டப்பட வேண்டும். புதிதாகச்சிந்திப்போம். எமக்கான கல்வியைக் கண்டறிவோம். நடைமுறை மற்றும் எதிர்காலச் சவால்களைத்தகர்த் தெறிவோம்.

முற்றும்




**இந்திய இசையை விரும்பிக் கேட்கும் சிம்பான்சிகள்**

பல அம்சங்களில் மனித இனத்தோடு நெருங்கிய உறவினர்கள் என மனிதக் குரங்குகளான சிம்பான்சிகளைத்தான் கூற முடியும். அவற்றுடைய மரபணுக்கள் நம்முடைய மரபணுக்களோடு 97 சதவீதம் பொருந்தி வரக் கூடியவை. அவற்றின் பல்வேறு நடையுடைய பாவனைகளும் நம்முடையதைப் போன்றவையே.

அவற்றுக்கு இசை கேட்கப் பிடிக்கும் என்றும் ஆனால், பிடித்தது சில வகை இசை மட்டுமே என்றும் சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்திய கர்நாடக இசையை விரும்பும் அளவுக்கு மேற்கத்திய பொப் இசையை அவை விரும்புவதில்லையாம்!


இன்னும் சொல்லப்போனால் மேற்கத்திய பொப் இசையைக் கேட்பதை விட நிசப்தமே மேல், ஆளை விடுங்கள் என்று அவை சொல்லாமல் சொல்கின்றன! இந்த ஆய்வுகளை அமெரிக்காவின் ஜார்ஜியாவிலுள்ள எமரி பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்தியுள்ளனர்.

இந்த ஆய்வுகளிலிருந்து மேற்கத்திய இசையைவிட நிசப்தமே மேல் எனக் கருதும் சிம்பான்சிகள் இந்திய, ஆப்பிரிக்க இசையை விரும்பிக் கேட்கின்றன எனத் தெரியவந்துள்ளது. சீரான ஓசைக்கட்டுகளில் உள்ள வித்தியாசத்தை அவற்றால் உணர முடிகிறது என்றும் வலுவான சத்தமான தாளங்கள் உள்ள இசையைவிட மெல்லிய காதுக்கு இதமான பாடல்களை சிம்பான்சிகள் விரும்புகின்றன என்றும் மேற்கண்ட ஆய்வுகளிலிருந்து புலனாகிறது. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? என்பதுபோல, சிம்பான்சிகளுக்கு ஏது இசை ரசனை என்ற நினைப்பு இருந்தால் அதை மாற்றிக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.






## கோதுமை-ஓட்ஸ் ஊத்தப்பம்



கோதுமை- அரை கப்
ஓட்ஸ்- அரை கப்
கடலைப்பருப்பு- கால் கப்
பாசிப்பருப்பு- கால் கப்
வெந்தயம் கால் மேஜைக்கரண்டி
பெருங்காயத்தூள்- சிறிதளவு
வெங்காயம் 1 பச்.மிளகாய்-3 கரட்-2 கறிவேப்பிலை சிறிதளவு
சீரகம்-1 ஸ்பூன் உப்பு, பட்டர்- தேவையா அளவு

செய்முறை:

கரட்டைத் துருவிக்கொள்ளவும்.

வெங்காயம் பச்சை மிளகாயை பொடியாக நறுக்கி வைக்கவும்.

கோதுமை, ஓட்ஸ், கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை 4 மணி நேரம் ஊற வைத்து சரியான பக்குவத்தில் கொர கொரப்பாக அரைத்து அதில் நறுக்கிய வெங்காயம், பச்.மிளகாய், உப்பு போட்டு நன்றாக கலந்துகொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து காய்ந்ததும் மாவை ஊற்றி அதன் மேல் துருவிய கரட்டை போட்டு ஊத்தப்பம் போல் சுட்டு எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வரலாற்றில் தொடர்ந்து 5 வருடமாக குறுந்திரைப்படப் போட்டிகளை நடாத்தி வரும் AAA Movies International நிறுவனத்தின்

5வது

# AAA விருதுகளுக்கான குறும்படப்போட்டியும் புகைப்படப்போட்டியும்

ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசுகளுடன் அற்புதமான AAA விருதுகள்

- படைப்புகள் ஈழத்தவர்களது சமூக, பொருளாதார, வாழ்வியல், பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருப்பதுடன் தனித்துவமான ஈழத்துத் திரைப்படத்துறை, புகைப்படத் துறை என்பனவற்றைக் கட்டியெழுப்புவனவாகவும் இருக்கவேண்டும்.
- அகில இலங்கை ரீதியாக போட்டிகள் நடைபெறும்.
- பாடசாலைப் பிரிவு, திறந்த பிரிவு எனப் போட்டிகள் நடைபெறும்.
- பாடசாலை மட்டத்தில் கலந்துகொள்ளும் படைப்புகள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் நடிகர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளர்களாக பாடசாலை தவிர்ந்த வெளியாரும் கலந்துகொள்ளலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமாக விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- படைப்புகளைச் சமர்ப்பிக்கும் போது பங்குகொண்ட நடிகர்களது பெயர்கள், பாத்திரங்கள், தொழிநுட்பவியலாளர்களது பெயர்கள் என்பனவும் வழங்கப்படவேண்டும்.
- ஒருவர் எத்தனை படைப்புகளையும் அனுப்பலாம்.
- குறும்படங்கள் ஆகக்கூடியது 20 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
- குறும்படங்களை AV அமைப்பில் DVD இல் 3 பிரதிகளாக அனுப்பவேண்டும்.
- படைப்புகள் 14.01.2015 புதன்கிழமை அன்றோ அதற்கு முன்பதாகவோ நிர்வாகத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

(8397)

கடந்த வருடங்களில் இக்குறுந்திரைப்படப் போட்டிகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகள்...

"Kathiramalai" Palaly Road, Urelu West, Chunnakam. Tel : 0213202500



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

தோற்றம் 26 . 01 . 1936

மறைவு 25 . 10 . 2014



## அமரர் சின்னத்தம்பி அருளம்பலம்

கடந்த 2014.10.25 ஆம் திகதி சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னத்தம்பி அருளம்பலம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.11.2014 சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும், 24.11.2014 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.52-D-10
உருத்திரபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 2217603 021 5671532



## நிரந்தர தொழில் வாய்ப்பு

அரச அங்கீகாரமுடைய எமது நிறுவனத்தில் உங்களுக்கு தேவையான வேலைகளை ஒரே கூரையின் கீழ் பெறலாம். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகள் (ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/கிளவுஸ்/PVC...:)தனியார் துறைமுகம், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இலக்ரீசன், மேசன் கையுதவியாளர்கள் இதுபோன்ற பல வெற்றிடங் கள் எம் கைவசம் உள்ளன. வயது 18-50 ஆண், பெண் உடனடியாக தேவை. சம்பளம் 19000/=, 38000/=, வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம்.

மேலதிக தகவல்களுக்கு :-077-6838231 (சி-9077)



# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை |
| --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 62 செவ். 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்தத் தொழில்<br>தொ.இ: B/2106 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 58.25 செவ். 7 இல்<br>உயரம்: 5'2" cm<br>தகைமை/தொழில்: O/L/அரச தொழில்<br>தொ.இ: B/2108 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 5.25 சூரிசெவ்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்தத் தொழில்<br>தொ.இ: B/2116 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 84.5 செவ்<br>தகைமை/தொழில்:BSC (லண்டன்)<br>தொ.இ: B/2117 |

| இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14 சூரிசெவ் 2இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3170 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 18.5<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்:A/L அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3173 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 48.75 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி /அரச தொழில்<br>தொ.இ: G/622 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51.5 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி / ஆசிரியர்<br>தொ.இ: G/621 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

PEARSON

edexcel



**REGISTER FOR ANY HND PROGRAMME & Get**

COMMENCEMENT ON 30th of November 2014



Samsung GALAXY Tab4

Hurry! Limited Offer

For Reserve your Tab

SMS YOUR DETAILS TO 077 309 9 308

Gold Partner of Pearson (Edexcel), UK

**BTEC HND**

Computing & Systems Development

Business Management

Equivalent to 1st and 2nd Years of a UK Bachelors Degree

Leading to UK Degree from LONDON metropolitan university

(சீ-9142)

Duration : 18-20 Months | Standard Fee : Rs. 260,000 | Installment : Rs. 50,000 + 14,000 x 15

**ESOFT METRO CAMPUS**

Sri Lanka's Largest Higher Education Network

No.137, K. K. S Road, Jaffna, Sri Lanka | 021 222 4142

www.esoft.lk

Contact your nearest pearson edexcel HND Centre

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Anuradhapura | 025-5670513 | Colombo | 011-7555520 | Jaffna | 021-2224142 | Kurunegala | 037-2223945 | Matara | 041-2233550 | Nuwara Eliya | 052-7755400 |
| Bandarawela | 057-2224042 | Galle | 091-7501125 | Kalmunai | 067-3673555 | Kalutara | 077-9604830 | Monaragala | 055-2055444 | Trincomalee | 026-7267200 |
| Batticaloa | 065-7200070 | Gampaha | 033-7388051 | Kandy | 081-2204400 | Kiribathgoda | 011-7555535 | Negombo | 031-2227990 | Wattala | 011-7555530 |

Hotline : 077 309 9 308 — 45 Branches Island wide



நாடு முழுவதிலுமுள்ள ESOFT கிளைகளிலிருந்து உங்களுக்கு சர்வதேச அங்கீகாரமுடைய

**கணினி மற்றும் ஆங்கில டிப்ளோமா**

DiTEC INTERNATIONAL

**Diploma in Information Technology**



இரு சான்றிதழ்கள் UK + ESOFT

- IT Fundamentals
- Microsoft Office
- PC Hardware
- Networking Essentials
- Internet & Email
- Web Designing - HTML
- Graphics and Animation
- Software Engineering
- C#.net
- Java
- Web Applications
- ASP.net
- Project

காலம் : 4 மாதங்கள் — பாடநெறிக்கட்டணம் : ரூ. 18,375

*கட்டணத்தினை தவணைமுறையாகில் செலுத்த முடியும்

DiE **Diploma in English**

Grammar ▸ Spoken English ▸ Comprehension

- Unit 1 - Greeting & Introduction
- Unit 2 - Grammar part I
- Unit 3 - Letter Writing
- Unit 4 - Emotions & Expressions
- Unit 5 - Grammar Part II
- Unit 6 - Presentations
- Unit 7 - Comprehension Part I
- Unit 8 - Comprehension Part II
- Unit 9 - Invitations
- Unit 10 - Case Study I
- Unit 11 - Case Study II

FREE Role Play DVD & Text Book

இரட்டை டிப்ளோமாவிற்கான சேமிப்பு ரூ.15,875

*கட்டணத்தினை தவணைமுறையாகில் செலுத்த முடியும் *condition Apply

காலம் : 4 மாதங்கள்
பாடநெறிக்கட்டணம் : ரூ. 9,750

For more details SMS your Details to 077 309 9 308

New Batches 2014.11.24 | 2014.11.30

Assured by PEARSON

பிரித்தானிய PEARSON EDEXCEL நிறுவனத்தின் தரச்சான்றிதழிக்கப்பட்டதுடன் பாடநெறிகள் இறுதியில் PEARSON EDEXCEL சான்றிதழ் வழங்கப்படும்

**ESOFT METRO CAMPUS**

Sri Lanka's Largest Higher Education Network

No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka.

Tel : 021 222 4142 Email: jaffna@esoft.lk

www.esoft.lk

(சீ-9142)

Hotline 077 309 9 308 — www.esoft.lk — 45 Branches Island wide



# பிரச்சினைகளின் சுமையா?

## நம்பிக்கையீனமா? மனத்தளர்வா? வாழ்க்கையில் வெறுப்பா?

நீங்கள் யாராகவும் இருக்கலாம். உங்கள் மன உளைச்சல் உங்களுக்கு எவ்வளவோ வேதனையையும் விரக்தியையும் தரக்கூடும். மனத்தளர்வு; மன அழுத்தம்; மண வாழ்க்கைப் பிரச்சினைகள்; காதல் மற்றும் ஏனைய உறவுச் சிக்கல்கள்; ஆரோக்கியம், பாலியல் சார்ந்த பிரச்சினைகள்; கடன் பழு உட்பட உங்களை வருத்துவது எதுவாயினும் தயவு செய்து எம்முடன் ஒரு தரம் பேசுங்கள்.

**உங்களைப் பற்றி அக்கறைப்பட நாங்கள் இருக்கிறோம்.**

(8247)

உங்கள்ள நீங்களாகவே ஏற்றுக் கொள்வோம். நாம் எவரையும் எடை போடுவதுமில்லை. தீர்ப்புக் கூறுவதுமில்லை. எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் எம்முடன் மனம் விட்டுப் பேசலாம். உணர்வு ரீதியான ஆதரவை நாம் உங்களுக்கு வழங்குவோம்.



**உங்களைப் பற்றிய தகவல்கள் யாவற்றையும் பரிபூரணமான இரகசியத்துடன் பேணுவோம்**

உங்கள் பெயரைக் கூட எமக்கு நீங்கள் வெளியிட வேண்டிய அவசியம் கிடையாது. உங்கள் தொலைபேசி அழைப்புக்காக அல்லது நேரடி வருகைக்காகக் காத்திருக்கிறோம்.

குறிப்பு: எம்மால் நிதி உதவி எதுவும் செய்தல் இயலாது. எமக்கு எந்த அரசியல், சமய சார்பும் இல்லை.

எங்கள் நிலையம் வருடத்தின் எல்லா நாட்களிலும் காலை 9.00 முதல் பி.ப 1.00 வரை திறந்திருக்கும்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

**(Sri Lanka Sumithrayo Probationary Branch)**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**(021) 222 8117**

**தொண்டர்கள் தேவை**

நீங்கள் உங்கள் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவரா? பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையின் எல்லையை நோக்கி நகர்வோருக்கு உணர்வு ரீதியான ஆதரவை வழங்க நீங்கள் தயாரா? வாரத்தில் ஒருநாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிச் சேவையாற்ற வேண்டும். முறையான பயிற்சிவழங்கப்படும். உடனே தொடர்பு கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# 2015 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக கடைகள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேளவிப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 24.11.2014 தொடக்கம் 28.11.2014 3.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 01.12.2014 முற்பகல் 10 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 01.12.2014 முற்பகல் 10.30

1.கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"செயலாளர், கரைதுறைப் பற்று பிரதேசசபை, முலலைத்தீவு"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 01:12.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். மறு பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு"** என்ற முகவரிக்கு 01.12..2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

2.கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக் கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத் திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராக ரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

5.ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

6 கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம ளிக்கலாம.

7.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

8.இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

9.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.

10.எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்படவேண்டும்.

11.இறைச்சிக்கடைகளுக்கு சபையால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகை செலுத்தப்பட வேண்டும்.

12.கேள்விதாரரின் பிணைப்பணம் உரிய குத்தகை ஒப்பந்த காலம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

13.தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.

14.குத்தகைக் காலம் ஒரு வருடமாகவே இருக்கும். ஆயினும் இதற்குக் குறைந்த காலப் பகுதி அறிவித்தலின் பிரகாரம் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு அமையலாம். எது எவவாறாயினும் ஒப்பந்தம் அவ்வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலுமே செல்லுபடியாகும். இக்கால அவகாசத்திற்கு குத்தகைப் பணத்தை செலுத்தத்தவறும் கேள்விதாரரின் வைப்புப் பணம் சபைக்குரியதாக மாற்றம் செய்வதுடன் அவர்களது பெயர் கேள்வி கோரும் தகுதியுடையவரின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் தவறுநர் பட்டியலிலும் சேர்த்துக்கொள்ளப்படும்.

15.யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்வி சபைக்கும் பிரதேசசபை செயலாளருக்கும் உரிமை உண்டு. அதனால் ஏற்படும் செலவுகளுக்கு நட்டஈடு கோர கேள்விகாரருக்கு உரிமை இல்லை.

16.சபையின் செயலாளரின் இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்போம் என்றும் இது தொடர்பாக சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

17.கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கொக்கிளாய், புதுமாத்தளன், ஆகிய இடங்களில் இறைச்சிக் கடைகள் சபையால் அமைத்து வழங்கப்படும் வரை தாங்களே தற்காலிக கடை அமைத்தல் வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்க மாட்டாது. அத்துடன் சபையால் கடை கட்டி வழங்கவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டுப்பணத்தில் விலக்களிப்போ குறைப்பனவோ மேற்கொள்ளப்படமாட்டாது.

18.கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இப்பிரதேச சபையின் கோழி இறைச்சி கடைகளிலிருந்து 01 KM சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

| இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | | |
| 1 | முள்ளியவளை பொதுச்சந்தை | 1,000.00 | 20,000.00 | 840,000.00 |
| 2 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,000.00 | 40,000.00 | 1,900,000.00 |
| 3 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 150,000.00 |
| 4 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |
| 5 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 25,000.00 | 1,030,000.00 |
| 6 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 25,000.00 | 1,115,000.00 |
| 7 | தண்ணீரூற்று கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 610,000.00 |
| 8 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 35,000.00 |
| 9 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 700,000.00 |
| 10 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 110,000.00 |
| 11 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 20,000.00 |
| 12 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |
| 13 | வற்றாப்பளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |
| 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,000.00 | 35,000.00 | 1,565,000.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 40,000.00 | 1,790,000.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 900,000.00 |
| 4 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 45,000.00 |
| 03. கொக்கிளாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 20,000.00 |
| 2 | கொக்குத்தொடுவாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 45,000.00 |
| 3 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 45,000.00 |
| 04. முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 20,000.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 135,000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 05. செம்மலை உப அலுவலகம் | | | | |
| 1 | குமுழமுனை பொதுச்சந்தை | 1,000.00 | 8,000.00 | 220,000.00 |
| 2 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 400,000.00 |
| 3 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 90,000.00 |
| 4 | குமுழமுனை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |
| 5 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 12,000.00 |

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.
22.11.2014

சு.ரவீந்திரநாதன் (செயலாளர்),
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-9141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெ.ஆதரவாளர்கள் மிரட்டினர்; பி.ஜே.பியும் துணைபோனது

(நேற்றைய தொடர்ச்சி...)

**என்னை எதிர்க்க ஆரம்பித்தார்கள்!**

இதையடுத்து கர்நாடக மாநிலத்தின் அரசுத் தலைமை சட்டத்தரணியாக நான் நியமிக்கப்பட்டேன். உடனே, அதை ஆயுதமாக எடுத்து என்னை ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் தாக்கத் தொடங்கினார்கள். ஒருவர் இரண்டு பதவியில் இருப்பது கூடாது. எனவே, ஆச்சார்யாவை, சொத்துக் குவிப்பு வழக்கின் சிறப்பு சட்டத்தரணி பதவியில் இருந்து விலக்க வேண்டும் என்று ஆளுநரைச் சந்தித்து மனுக் கொடுத்தனர். இரண்டு ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். பொதுநல வழக்குப் போட்டார் ஒருவர். ஆனால், நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி ஆனது. ஆனால், அரசியல் அழுத்தம் காரணமாக ஆளுநரிடம் கொடுத்த மனு

ஜெயலலிதா



வேலை செய்தது. பி.ஜே.பியின் மேலிடத்தில் இருந்து கர்நாடக அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. என்னை அரசின் தலைமை சட்டத்தரணி பொறுப்பில் மட்டும் வைத்துக்கொள்ளவும் சிறப்பு சட்டத்தரணி பொறுப்பில் இருந்து விடுவிக்கவும் அந்த அறிவுறுத்தல் இருந்தது. அந்த அழுத்தம் எனக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால், நான் என்னுடைய அரசுத் தலைமை சட்டத்தரணி பதவியை இராஜினாமா செய்தேன். சொத்துக் குவிப்பு வழக்கை நடத்தும் சிறப்பு அரசுத்தரப்பு சட்டத்தரணியாக செயற்படவே விரும்பினேன்.

**என்னை மிரட்டினார்கள்!**

சென்னையில் இருந்து இரண்டு சட்டத்தரணிகள் கர்நாடக உயர் நீதிமன்றப் பதிவாளர் மற்றும் உள் துறை செயலாளர், தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு ஒரு மனுவைக் கொடுத்தனர். அதில் நான், வேண்டுமென்றே ஜெயலலிதா மீது உள்ள வன்மத்தால் இந்த வழக்கை நடத்துகிறேன். எனவே, என்னைச் சிறப்பு சட்டத்தரணி பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டு இருந்தனர். அவர்களின் அனைத்து அஸ்திரங்களும் அர்த்தம் இழந்த நேரத்தில் கடைசியாக வேறு ஒன்றைக் கையில் எடுத்தனர். நான், பி.எம்.எஸ் கல்வி அறக்கட்டளை ஒன்றில் சேர்மன் பொறுப்பில் இருந்தேன். அந்த அறக்கட்டளை சில பொறியியல் கல்லூரிகளை நடத்திக் கொண்டிருந்தது. அதில், நிர்வாகத்தில் சில முறைகேடுகள் நடப்பதாகவும் அதில் எனக்கும் தொடர்பிருப்பதாகவும் சிலர் என் மீது கர் நாடக லோக் ஆயுக்தா நீதிமன்றத்தில் புகார் தெரிவித்தனர். முதலில், நான் அரசுத் தலைமை சட்டத்தரணியாக இருப்பதால் நான் ஓர் அரசு ஊழியர். தனி நபர் ஒருவர் என் மீது வழக்குத் தொடுக்க அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். ஆனால், என் மீது வழக்குத் தொடர அப்படி அந்த தனிநபர் அரசாங்கத்திடம் எந்த அனுமதியும் பெறவில்லை. எனவே, அந்த மனுவே ஏற்கத்தக்கது அல்ல. ஆனால், லோக் ஆயுக்தா நீதிமன்றம் அதை ஏற்றுக்கொண்டதுடன் ஒரு விசித்தி ரமான உத்தரவையும் பிறப்பித்தது. அது மனுதாரர்களிடம் சொன்னது, நீங்கள் அளித்திருக்கும் புகாரில் உரிய முகாந்திரம் இல்லை. எனவே, இன்னும் முகாந்திரம் உள்ள ஒரு மனுவை தயாரித்துக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவிட்டது.



நூல் வெளியீட்டு விழாவில்...

இது எனக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது. என் மீது வழக்குத் தொடரவே அவர்களுக்கு அனுமதி இல்லை. அந்த ஒரு விடயத்தை வைத்தே நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்திருக்கலாம். ஆனால், அதோடு போதிய ஆதாரங்கள் இல்லாத மனு என்ற அடிப்படையிலாவது அதை தள்ளுபடி செய்திருக்க வேண்டும், அதையும் செய்யவில்லை. மாறாக நிறைய ஆதாரங்களைக் கொண்டு ஒரு மனுவை தயாரித்துக்கொண்டு வாருங்கள் என்று உத்தரவிட்டதை எப்படி என்றே என்னால் யூகிக்க முடியவில்லை.

மேலும், இந்தப் புகாரை என் மீது அளிப்பதற்கு முன்பு என்னைச் சந்தித்த ஒரு நபர், நீங்கள் உடனடியாகச் சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து விலகிக்கொள்ளாவிட்டால், உங்கள் மீது ஏராளமான புகார்களை வைத்து லோக் ஆயுக்தா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாகச் சொல்கிறார்கள். எனவே, தயவுசெய்து அதில் இருந்து விலகிக் கொள்ளுங்கள்' என்று வேண்டுகோள் வைக்கும் தொனியில் என்னை மிரட்டவும் செய்தார்.

**பதவியை இராஜினாமா செய்தேன்!**

சட்டத்தரணி தொழிலில் அடியெடுத்து வைத்ததில் இருந்து நான் நீதியின் பக்கமே செயற்பட்டிருக்கிறேன். கடந்த 56



ஆச்சார்யா

ஆண்டுகளாக என்னுடைய நேர்மையின் மூலம் கட்டி வைத்திருந்த என்னுடைய மாண்பு தகர்க்கப்பட்டதாக எண்ணி அயர்ச்சி அடைந்தேன். நான் அப்போதே இந்த வழக்கில் சிறப்பு சட்டத்தரணி பொறு ப்பில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால், அதே சமயம், என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து என் மீது படிந்திருந்த கறையை நீக்கி விட்டுத்தான் நான் அதைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து விட்டு நான் பதவி விலக வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

அதனால், லோக் ஆயுக்தா நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து நான் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தேன். அப்போது கர்நாடக உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் அனைவரும், என் பின்னால் இருந்தனர். கர்நாடக உயர் நீதிமன்றம் அந்த உத்தரவுகளை தள்ளுபடி செய்தது. அந்த உத்தரவு 2012, ஓகஸ்ட் 2ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. நான் அதற்கு அடுத்த நாள் அதாவது 3ஆம் திகதி என்னுடைய இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்தேன்.

ஆனால், தலைமை நீதிபதி என்னை அழைத்து என்னுடைய முடிவை மறு பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், நான் எந்த நிலையிலும் அதைச் செய்யமாட்டேன் என்று சொல்லி என்னுடைய முடிவில் உறுதியாக நின்றேன். ஆனால், என்னுடைய இராஜினாமாவை அவர்களும் உடனடியாக ஏற்கவில்லை. 2013, ஜனவரி 17ஆம் திகதி ஏற்றுக்கொண்டனர். அன்றோடு எனக்கும் சொத்துக் குவிப்பு வழக்குக்கும் இருந்த தொடர்பு முடிந்தது. என்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட வழக்குகளில் இறுதிவரை போராடாமல் நான் இடையில் விலகிக்கொண்ட வழக்கு இது ஒன்றுதான். அந்த அளவுக்கு எனக்கு இடையூறுகள் கொடுக்கப்பட்டன என்று முடித்துள்ளார் ஆச்சார்யா.

இந்த வழக்கை வைத்து சட்டத்தை இழுத்தடிக்கும் வழிமுறைகள்' ("லா ஆஃப் அட்ஜர்ன்மென்ட்') என்று ஒரு நாவலையே என்னால் எழுத முடியும். ஆனால், எதிர்காலத்தில் அது குற்றவாளிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்ற காரணத்தால் அதை நான் செய்யாமல் இருக்கிறேன் என்று ஆச்சார்யா கிண்டல் அடிக்கவும் தவறவில்லை.

**ஜூனியர் விகடன்**








பூமணி நவாலியூர்க்கவிராயர் த.பரமலிங்கத்தின் பூமணி சிறுவர் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற போது [illegible] கலைவாணி நாடக மன்ற ஸ்தாபகர் கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் மங்கல விளக்கேற்றுவதையும் நூலின் முதற்பிரதியினை நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனனிடமிருந்து சட்டத்தரணி தேவராசா ரெங்கன் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பன்னங்கண்டி பாலத்தை விரைவாக புனரமையுங்கள்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு பொதுமக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பன்னங்கண்டிப் பாலம் போக்குவரத்திற்கு உதவாத நிலையில் காணப்படுவதால் அருகில் தற்காலிகமாக உப வீதியொன்று அமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இப் பால புனரமைப்பு வேலைகள் மாஹறா தனியார் நிறுவனத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாரிகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் அமைக்கப்பட்டுள்ள உப வீதியூடாகவே மக்கள் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் உப வீதியானது புதுப்பாலம் அமைப்பதற்காகவே மாஹறா நிறுவனத்தினரால் தற்காலிகமாக அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் உப வீதியில் ஒரு பகுதியிலிருந்து மற்றைய பகுதிக்கு நீரைக் கடத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள நீர்க்குழாயானது பெரிதாகக் காணப்படாமையால் நீரானது ஒரு பகுதியிலேயே தேக்கி வைக்கப்படுகிறது.

இதனால் மழை நீர் அள்ளுண்டு வரும்போது வீதியை மேவி பாய வேண்டியசந்தர்ப்பம்காணப்படுகிறது.

இவ்வாறு நீர் பாயுமாகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள உப வீதி சேதமடைந்து போக்குவரத்து தடைப்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதிப்போக்குவரத்து நிறுத்தப்படும் பட்சத்தில் வட்டக்கச்சிக்கூடான போக்குவரத்துப் பாதை நிறுத்தப்பட்டு வட்டக்கச்சி மக்கள் கிளிநொச்சி நோக்கி செல்வதாகில் புளியம்பொக்கணை சந்தியை சென்றடைந்தே கிளிநொச்சியை சென்றடைய வேண்டும்.

இதனால் மக்கள் நேரத்தையும் பணத்தையும் வீண் விரயம் செய்ய வேண்டி ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆகையால் உப வீதியில் அமைக்கப்பட்டுள்ள நீர் குழாயினை பெரிதாக இணைத்து வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு இருக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)

# வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சுயதொழிலுக்கான உதவி

## யுனிசெப் நிறுவனம் வழங்கியது

(மன்னார்)


யுனிசெப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னர் மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுயதொழிலுக்கான உதவி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண சமூக சேவை திணைக்களத் தகவல் தெரிவிக்கின்றது.

பாடசாலை செல்லும் மாணவர்களின் குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்குடன் சுயதொழிலுக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 36 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் தொகை கடந்த திங்கட்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தின் மன்னார், அடம்பன், முசலி ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 5 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்த உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தினால் கடந்த 2012 ஆம் ஆண்டு 122 பேருக்கும் 2013 ஆம் ஆண்டு 117 பேருக்கும் மன்னார் மாவட்டத்திலுள்ள குடும்பங்களின் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகளுக்காக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து த.தே.கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரினால் வறுமைக் கோட்டின் கீழ்வாழும்மாணவர்களுக்கும்சிவநகர்மாதர்கிராமஅபிவிருத்திசங்கத்தினரால்தெரிவு செய்யப்பட்டவர்களுக்குமாக மொத்தம் 24 துவிச் சக்கரவண்டிகள் நேற்று முன்தினம்வழங்கப்பட்டதைப்படங்களில்காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# அரச ஊழியர் வீட்டுத்திட்டப்பகுதியில் பொலிஸ் நிலையம் அமைக்க முயற்சி

(குருமன்காடு)

ஓமந்தை அரசஊழியர் வீட்டுத்திட்ட பகுதியில் ஒரு ஏக்கர் நிலப்பகுதியில் பொலிஸ் நிலையம் அமைக்க பொலிஸார் முயற்சித்து வருகின்றனர் என ஓமந்தை அபிவிருத்தி குழுவினர் தெரிவித்தனர்.

ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தின் அபிவிருத்திக் குழுவிற்கும் அங்கு வசிப்போருக்குமிடையிலான அவசர கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது அபிவிருத்தி சம்பந்தமான பின்னடைவுகளுக்கான காரணங்கள் ஆராயப்பட்டபோது வவுனியா பிரதேசசெயலாளரிடம் பொலிஸார் தமக்கு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டபகுதியில் ஒரு ஏக்கர் காணிகோரியிருப்பதாக தெரிவிக்கப்பட்டு அது தொடர்பான ஒத்துழைப்பை அபிவிருத்திக் குழுவிடம் கேட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும் ஓமந்தை அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சில அரச ஊழியர்கள் வீடு கட்டவில்லை. இதனால் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

அதற்கான காரணங்களாக, முழுமையான வீதிகள் அமைக்கப்படாமை, நிதி வசதியின்மை, காணியுள்ள சிலருக்கு காணி வழங்கப்பட்டமை, அரச விடுதிகளில் உள்ளவர்கள் அரச விடுதியில் இருப்பதனால் காணிகளில் வீடுகட்ட விரும்பாமை மற்றும் அரசியல் காரணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டத்தில் வீடு கட்டப்படாத காணிகள் வெகுவிரைவில் வேறு ஆட்களுக்கு கையளிக்க வேண்டும்.

இக்காணிகள் அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்த யாருக்கும் இடமளிக்கவிடக்கூடாது, காணிகள் வழங்கப்பட்ட அரச ஊழியர்கள் விடுதிகளில் இருந்து வெளியேற உதவியளித்தல். வீடுகட்ட வசதியற்றவர்களுக்கு நிதி உதவியளிப்பு வழங்கல், அரச ஊழியர்கள் ஒன்றுகூட கலாசார மண்டபத்தை விரைவில் கட்டிமுடிக்க வேண்டும், பாலங்களை அமைக்க இடர் உதவி நிதியை பயன்படுத்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் உதவி பெறல், முழுமையாக வீதியமைத்தல், சந்திகளில் மின் விளக்குகள் அமைத்தல், ஆலயம் விரைவில் அமைத்தல், வீடமைப்பு அதிகரர சபையின் கீழ் இவ் வீடமைப்புத்திடட காணி மேற்பார்வையை கையளித்து வீட்டிற்கான உறுதியை வீடமைப்பு அதிகார சபை ஊடாக பெறல் மற்றும் கோப்சிற்றியை நிறுவுதல். இத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமும் வவுனியா பிரதேச செயலாளரிடமும் அவசர கோரிக்கையாக முன்வைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இச்சந்திப்பில் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட தலைவர் வே.இந்திரன், உபதலைவர் சுவரத குமார், செயலாளர் க.பேணாட், துணுக்காய் பிரதேச செய லாளர் எஸ்.குணபாலன் உள்ளிட்ட பல அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர். (2-250)




## விசேட பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

வடமாகாண ஆசிரியர் ஆலோசகர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் புதிதாக ஆசிரிய ஆலோசகர்களை உள்ளீர்ப்பது தொடர்பாகவும் ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப் படவுள்ளதால் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களை உள்ளடக்கிய ஆசிரிய ஆலோசகர்களை கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (2-277)

# குளங்களை புனரமைப்பது குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடல்

தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றம் காரணமாக குளங்களில் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்கும் நோக்கில் வவுனியா மாவட்ட விவசாயிகளுடனான கலநதுரையாடல்நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையமும் விவசாய திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இக் கலந்துரையாலில் சேதமடைந்துள்ள குளங்களை புனரமைப்பு செய்வத னூடாக அனர்த்தங்களை எவ்வா றான வழிமுறைகளில் தடுக்க முடியும் என்பது தொடர்பில் விவ சாயிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை அணைக்கட்டுகளின் தற்போதைய தன்மைகள் குறித்தும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விவசாயிகளிடம் இருந்து எழுத்து மூலமாக பெறப்பட்டிருந்ததுடன் அவற்றை சீர்செய்வது தொடர்பிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளர் ரி. சூரியராஜாவினால் எடுத்துரைக்கப்பட்டிருந்தது.

இக் கலந்துரையாடலில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரி.சூரியராஜா, கமநல சேவைகள் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி எம். சுலோஜனா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## பூவரசன் குளம் குடியிருப்பு

# வீதி புனரமைப்பு 95 இலட்சம் ரூபா நிதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழுள்ள பூவரசன் குளம் குடியிருப்பு வீதியின் புனரமைப்புப்பணி நடைபெற்று வருகின்றது.

ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்ட குறித்த வீதி மாகாணங்களுக்கான குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து உள்ளூராட்சி அமைச்சினால் 95 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் இதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வீதி புனரமைப்பின் மூலம் பூவரசன் குளம், கரும்புள்ளியான், விநாயகர்புரம், பொன்னகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயனடையவுள்ளனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

## விஞ்ஞானம் மூன்று மணித்தியாலம்

(நேற்றைய தொடர்ச்சி)


*பௌதிகவியல்*

**09.** அ) மோட்டார் வண்டியின் இயக்கமொன்றிற்கான வேகநேர வரைபு தரப்பட்டுள்ளது.




1. மோட்டார் வண்டியின் இயக்கத்தை வரைபின் துணை கொண்டு விளக்குக.
2. 12 செக்கன் வரையும் பயணத்தை முடித்த வண்டி அடுத்த 2 செக்கன்களில் சீராக ஓய்வுக்கு வருகிறது. இவ்வியக்கத்தை காட்டவரைபை பிரதி செய்து பூரணப்படுத்துக.
3. ஓய்விற்கு வரும்போது வண்டியின் அமர்முடுகல் என்ன?
4. மாறா வேகத்தில் வண்டி பயணம் செய்த மொத்த தூரம் என்ன?
5. வண்டியின் திணிவு **400 kg** எனின் முதல் 4 செக்கன்களிலும் ஏற்பட்ட ஆர்முடுகலை உண்டாக்க வண்டியில் ஏற்பட்ட விளையுள் விசை என்ன?


ஆ




மேற்காட்டப்பட்ட படமானது மண் அள்ள உதவும் பொறி ஒன்றை காட்டுகிறது.

1. இவ் எளிய பொறியின் வகை என்ன?
2. $r_1 = 1m, r_2 = 20\ cm$ ஆகவும் காணப்பட்டால் பொறியின் வேகவிகிதம் என்ன?
3. **200 kg** மண்ணை உயர்த்த **500N** எத்தனம் பயன்பட்டது.
   $(g = 10\ ms^{-2})$
   a) பொறிமுறை நயம் யாது?
   b) பொறியின் திறன் யாது?
4. திறன் **100 %** ஆக காணப்படும் பொறிகள் எவ்வாறு அழைக்கப்படும்.
5. மண் அள்ளப்பட்ட ஆழம் **4 m** எனின், **200 kg** மண்ணை தரைமட்டத்திற்கு கொண்டுவர செய்யப்பட்ட வேலை என்ன? $(g = 10\ ms^{-2})$


**10.** அ) மின்னை பிறப்பிக்கும் சாதனம் ஒன்று டைனமோவாகும். ஒருவகை டைனமோ படத்தில் உள்ளது.




1. இவ் டைனமோவின் வகை யாது?
2. தூரிகை **X,Y** என்பவற்றில் நேர், மறை முடிவிடங்களைக் குறிக்க.
3. இங்கு பெறப்படும் தூண்டல் மின்னிற்கும், நேரத்திற்குமான வரைபை வரைக.
   (அச்சுகள் தெளிவாக குறிக்கப்படவேண்டும்)

ஆ) நிலை மாற்றிகள் வோல்ற்றளவை மாற்றியமைக்க உதவுகின்றன. தூண்டற்சுருளின் செயற்பாடும் வோல்ற்றளவை உயர்த்தும் ஒரு செயற்பாடாகும்.

1. சாதாரண படி கூட்டு மாற்றி ஒன்றிற்கும், தூண்டற் சுருளிற்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு யாது?
2. தூண்டற் சுருளை ஒத்த அமைப்பு ஒன்று பயன்படும் இடம் ஒன்று தருக.
3. தூண்டற் சுருளில் தொடர்ந்து மின் தூண்டப்பட உதவும் விசேட அமைப்பு எது?
4.




a) ஆளி **S** ஐ மூடும்போது உமது அவதானம் என்ன?
b) ஆளி **S** மூடியிருக்கும் போது உமது அவதானம் என்ன?
c) ஆளி **S** திறக்கும் போது உமது அவதானம் என்ன?

# அரசிலிருந்து விலகிய அத்துரலிய ரத்னதேரரை விஹாரையிலிருந்து வெளியேற்ற கோரிக்கை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் இணைத் தலைவரும் கோட்டே சதஹம் செவன விகாராதிபதியுமான அத்துரலிய ரத்ன தேரரை குறித்த விகாரையிலிருந்து வெளியேற்றுமாறு கோரி அரசாங்க ஆதரவாளர்கள் கோட்டே நகரசபை தலைவருக்கு கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

கோட்டே கௌதமி வீதி ராஜகிரியவில் அமைந்துள்ள குறித்த விகாரையிலிருந்து அத்துரலிய ரத்ன தேரரை வெளியேற்றுமாறே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கோட்டே நகர சபைத் தலைவரிடம் கடிதம் கையளித்த குழுவினர் குறித்த விஹாரையை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்பட்டமையினால் இப்பகுதியில் நேற்று முன்தினம் காலையிலிருந்தே பதற்றம் நிலவியது.

இதனையடுத்து விஹாரையைச் சூழவுள்ள பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. கடந்த 2007ஆம் ஆண்டு இந்த விஹாரை அத்துரலிய ரத்ன தேரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

தற்போது அத்துரலிய ரத்ன தேரர் உட்பட ஹெல உறுமயவினர் அரசாங்கத்தில் வகித்துவந்த பதவிகளிலிருந்து வெளியேறியுள்ள நிலையிலேயே இந்த விஹாரையிலிருந்து அவரை வெளியேற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் விஹாரைக்கு வருகை தந்த அத்துரலிய ரத்ன தேரர் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளாது கடந்த 2 தேர்தல்களிலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஹெல உறுமயவின் முடிபு நல்லதே

**இப்படிக் கூறுகின்றார் பிரதமர்**

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய மாறியது நல்லதே. நாங்கள் முன்னோக்கிச் செல்லவும் ஒரு சிறு இடைவெளி தேவை. எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் இருந்தால்தான் அரசியல் ருசிக்கும். இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரட்ன விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிக்குமார்களுக்கு அரசியலில் நேரடியாகத் தலையிட உரிமையில்லை.

அவர்கள் சொல்வதைப்போல ஆட்சி நடத்தினால் மக்களுக்கு வெறுத்துப்போய் விடும். பிக்குமார்கள் வாழ வேண்டிய முறை பற்றி புத்தசமயம் தெளிவாகக் கூறியிருக்கிறது.

சில பிக்குமார்கள் புத்த தர்மத்தை துவம்சம் செய்துகொண்டு அரசியல் நடத்தி வருகிறார்கள் என்பது கவலைக்குரிய விடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இலங்கை அரசுடன் பேசும் வரை மீனவர்களே எல்லை தாண்டாதீர்

## வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா கோரிக்கை

(கொழும்பு)

மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இலங்கையுடன் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாகத் இந்தியா அறிவித்துள்ளது. அதுவரை இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாணட வேண்டாம் எனக் கேட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்தியா இந்த விவகாரத்திற்கு தீர்வு காணும் வரை, சிறையில் இருக்கும் 24 மீனவர்களை விடுவிக்கும் வரை இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடவேண்டாமென அவர் கேட்டுள்ளார்.

தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே இதனை தெரிவித்த அவர் மீனவர்கள் கடல் எல்லையை கடப்பதன் மூலம் நிலைமையை மேலும் சிக்கலாக்க வேண்டாம் என கேட்டுள்ளார்.

அரசாங்கம், மீனவர் அமைப்புகளுக்கிடையிலான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் மீட்க முயற்சிகளை மேற்கொள்வோம்.

எனினும் மீனவர்கள் மீண்டும் இலங்கையின் எல்லைக்குள் மீன் பிடிக்க சென்று நிலைமையை சிக்கலாக்கலாம் என சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான சம்பவம் நடைபெறலாமல் இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது

## பொன் செல்வராசா எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில்சட்டம்ஒழுங்கு நிலைமை சீர்கெட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் காணிகளை அரசாங்கம் பலவந்தமாக கைப்பற்றி வருகின்றது.

இவ்வாறான ஓர் நிலைமையில் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையை பாதுகாப்பது எவ்வாறு? நாட்டில் நல்லாட்சி கிடையாது.



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் அக்கறை காண்பிப்பதில்லை.

அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கடமை எமக்கு உண்டு. அந்த கடமையிலிருந்து நாம் தவற மாட்டோம் . தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதனால் தமிழ் மக்களின் மனம் காயப்பட்டுள்ளதாக பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# இலங்.நீதிமன்றத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

## ஐ.தே.க.சுட்டிக்காட்டு

நீதிமன்றம் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மற்றும் நீதிமன்றம் குறித்த மக்களின் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. நீதியின் ஆளுமை வலுவிழந்துள்ளது. நல்லாட்சிக்கான பண்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் ஆளும் கட்சி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் மோட்டார் சைக்கிள் வழங்குவதனை நல்லாட்சியாக கருத முடியாது.

சிரேஷ்ட அமைச்சர்கள் மக்களுக்கு சேவையாற்ற பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சிரேஷ்ட அமைச்சர்களுக்கு கடமைகளும் வழங்கப்படவில்லை.

நாட்டில் நல்லாட்சி நிலவுகின்றதா? என்பது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது என ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைக் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து இறுதித் தீர்மானம் இல்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாட்களில் மிகவும் தீர்மானமிக்க பல்வேறு சம்பவங்கள் இடம்பெறவுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் சட்டவிரோதமான முறையில் நடத்தப்படுகின்றது.ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிளவடைந்து துண்டுகளாக சிதைவடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.நாம் இது குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை.

பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதா? பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா? அல்லது தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா? என்ற தீர்மானத்தை ஜே.வி.பி. கட்சி இதுவைரயில் எடுக்கவில்லை.



எதிர்வரும் நாட்களில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என ரில்வின் சில்வா நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-5)

# யுத்தத்திற்காக செலவழித்த பணத்தை அபிவிருத்திக்கு செலவழிக்கிறது அரசு

## அமைச்சர் மஹிந்த யாப்பா பெருமிதம்

ஒரு காலத்தில் யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பணம் தற்போது நாட்டின் அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் யாப்பா, நாட்டில் தற்போது எங்கு திரும்பினாலும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் முன்னொரு காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் யுத்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் மரண வீடுகள் தான் காணப்பட்டன.

இன்று ஜனாதிபதியின் ஆளுமையின் முன்னால் எதிர்க்கட்சிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறி வருகின்றன. இதன் காரணமாக அவர்களால் இதுவரை ஒரு பொது வேட்பாளரைக் கூட தேடிக் கண்டு பிடித்துக் கொள்ள முடியவில்லை. தேர்தல் முடியும் வரை அவர்களால் பொது வேட்பாளரைத் தேடிக் கொள்வது சிரமமாகவே இருக்கும்.

எதிர்வரும் ஆண்டில் மாத்தறை முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட மாவட்டமாக மாறிவிடும். அதற்கான காரணம் ஜனாதிபதியின் அபிவிருத்திப் பணிகள் தான்.

எனவே பொதுமக்கள் அவரது வெற்றியை உறுதிப்படுத்த முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மூச்சு

ஒருவர் அசையாமல் படுத்திருக்கிறார்.

அவர் இருக்கிறாரா? போய்விட்டாரா? என்பதை எப்படி முடிபு செய்கிறோம். மூச்சு வருகிறதா? இல்லையா? என்பதைக் கண்டு பிடிப்பதற்கு அவர் மூக்குக்கு முன்னால் புறங்கையை வைத்துப் பார்க்கிறோம்.

மூச்சு என்பது அவ்வளவு முக்கியமான ஒரு விடயம். சுவாசம் இல்லை என்றால் எதுவுமே இல்லை.

பூமி இருக்கிறதே. அது கூட சுவாசிக்கிறது என்பதை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

பூமிக்கு மேலே இருக்கிற மண் அடுக்கில் காற்றில் உள்ள ஒட்சிசன் ஒட்சி கரணமடைகிறது என்றுதான் இதுவரைக்கும் எல்லோரும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்த ஒட்சிசன் பூமிக்குள்ளே ஒரு கிலோ மீற்றர் ஆழம் வரைக்கும் ஊடுருவிப் போகுறதாம்.

பூமிக்குள்ளே இரண்டு பக்கமும் பல கிலோமீற்றர் வரைக்கும் பரவுகிறதாம். பூமிக்குள்ளே இருக்கிற நீர் நிலை அடுக்குகள் தான் நுரையீரல் செய்யும் வேலையை செய்கிறதாம். நம் உடம்பில் நுரையீரல் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது.

ஒரு மரத்தை தலை கீழாகத் தொங்கப் போட்டால் எப்படி இருக்கும்: அப்படித்தான் நுரையீரலும் இருக்கும்.

வலது பக்கம் ஒன்று, இடது பக்கம் ஒன்று. வலது பக்க நுரையீரல் சற்றுப் பெரிதாக இருக்கும். நுட்பமான நரம்புக் குழாய்கள் அதில் இருக்கும்.

கோடிக்கணக்கான நுண்ணிய குழாய்களை வைத்துக் கொண்டு தான் அது வேலை செய்கிறது.25 கோடி குழாய்கள் இருக்குமாம்.

நுரையீரல் நிறம் கருஞ்சிவப்புதான். புகை அதிகமாக உள்ளே போய்விட்டது என்றால் அது கறுப்பாகி விடும்.

காற்றில் உள்ள பிராண வாயுவை இது இழுத்து எடுத்துக் கொண்டு இரத்தத்தை சுத்தப்படுத்தும் முக்கியமான வேலையை செய்கிறது. அசுத்த காற்றை வெளியே அனுப்பிவிடுகிறது.

ஒருவர் வேகமாக ஓடி வருவார். அவருக்கு மூச்சு இரைக்கும். பயங்கரமாக எதையாவது பார்த்துவிடுகிறார். உடனே மூர்ச்சையாகிவிடுவார்.

இதுபோன்ற சமயங்களில் வேறு எந்தத் தூண்டுதலும் இல்லாமல் நுரையீரல் தானாகவே வேகமாக இயங்கும்.

இப்படி ஒரு அவசியம் ஏற்படும் போது இயக்கத்தைத் தூண்டி விடும் முக்கியமான இணைப்பு மூளைக்குக் கீழே முதுகு எலும்புக்கு மேற்பகுதியில் இருக்கிறது. அது உடனே சுவாசத்திற்கு அவசர உதவியை கொடுக்கிறது.

ஒருவர் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார். இந்த சமயத்தில் அவருக்கு ஒரு பங்கு காற்று தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் எழுந்து நடக்கும் போது ஒன்றரை மடங்கு தேவைப்படும்.

ஓடினாரென்றால் மூன்று மடங்கு தேவைப்படும். படுத்திருக்கும் போது அரை மடங்கு தான் தேவைப்படும். இதற்கு நிமிடத்துக்கு 16 தடவை மூச்சு விட்டாக வேண்டும்.

இப்படி சாதாரணமாக உள்ளே இழுக்கும் காற்று சிறிதாக இருந்தாலும், இதுபோல எட்டு மடங்கு காற்றை உள்ளே இழுத்து வைத்துக்கொள்ளும் சாமர்த்தியம் நுரையீரலுக்கு உள்ளது.

தண்ணீர், நுண்கிருமிகள், இரசாயனப்பொருள் இப்படி எது உள்ளே போனாலும் நுரையீரல் சமாளிக்கும்.

முப்பது வருடமாக விடாமல் புகைபிடிப்பவர் தொடர்ந்து உள்ளே அனுப்பி வைக்கிற புகையைக் கூட சமாளிக்கிறது என்றால் பாருங்கள்.

உள்ளே போகும் புகை நுட்பமான சுவாச முடிச்சுக்களை அழித்துவிடும். கரிப்புகை அதன் மேலே படிந்து உபயோகம் இல்லாமல் செய்து விடுகின்றது.

ஆனாலும் தேவைக்கு அதிகமாக எட்டு மடங்கு கூடுதலான சுவாச முடிச்சுக்கள் நம் உடம்பிற்குள் இருக்கிறது. அதனால் சமாளிக்க முடிகின்றது.

சமாளிக்க முடியவில்லை என்றால், சில சமயம் மூச்சுத் திணறும். அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும்.


ஆனால், அப்படி யார் விடுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூனை... பூனை... பூனை!



...இருட்டிக்கொண்டு வந்தது.

வேக வேகமாக அந்தக் கிர்ாமத்தின் கோயிலுக்கு வந்துசேர்ந்தான்.

பெரிய கத்தவை மிகுந்த சிரமப்பட்டுத் திறந்து உள்ளே சென்றான்.

உள்ளே ஒரே இருட்டு. ஏன் கோயிலுக்குள் விளக்கு இல்லை ஆட்கஞும் இல்லை.

என்னாச்சு இந்தக் கோயிலுக்கு?' என்று தனக்குள் கேட்டுக்கொணடு, கதவுக்கு அருகே இருந்த விளக்கை எரியவிட்டான்.

அப்போது, அவனுக்குள் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆகா... எனக்கு வேலை வந்திருச்சு என்று வாய் விட்டுக் கத்தினான். அந்தப் பெரிய இடத்தில் திரைச் சீலைகள், பெரிய பெரிய வரைபடத் தாள்கள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன.

அதுதான் அவன் மகிழ்ச்சிக்குக் காரணம்.

உடனடியாக மை, தூரிகை எல்லாம் எடுத்து வரையத் தொடங்கினான.

வழக்கம்போல சிறிய பூனை, பெரிய பூனை, ஒல்லியான பூனை, குண்டான பூனை, பூனைகள... பூனைகள்... பூனைகள்!


இந்த முறை அங்கே இருந்த பெரிய திரைச் சீலையின் அளவுக்குப் பெரிதாக ஒரு பூனையை வரைந்தான்.

அந்தப் பிரமாண்டமான பூனை, மிகத் தத்ரூபமாக இருந்தது. ஜோஜி, இதுவரை அவ்வளவு பெரிய பூனையை வரைந்ததே இல்லை.

அந்தப் பூனையை மிகவும் பிடித்துப்போயிற்று. அவ்வளவு பெரிய பூனையை வரைந்ததால், மிகவும் களைப்பாக இருந்தது.

அந்த அறையிலேயே படுத்துவிட்டான். ஆனால் தூக்கம் வரவில்லை. பெரிய அறையாக இருந்ததால், உலகத்திலேயே அவன் ஒருவன் மட்டும் இருப்பது போன்ற உணர்வு. ஏதாவது சின்ன அறை இருக்குமா என்று தேடினான்.

ஓரிடத்தில், சுவரில் அலமாரி போன்று இருப்பதைக் கவனித்தான்.



அதைத் திறந்தான். நான்கு பேர் படுப்பதற்கு வசதியான இடமாகத் தெரிந்தது.

அது, ஜோஜிக்குப் பிடித்திருந்தது. உள்பக்கம் நுழைந்து, கதவை இழுத்து மூடித் தூங்க ஆரம்பித்தான்.

பின்னிரவில் ஓர் உறுமல் சத்தம் கேட்டு விழித்தான். உர்ர்... உர்ர் என்ற சத்தம், அவன் இருக்கும் அறையில் கேட்டது.

சத்தத்தைவைத்துப் பாரக்கும்போது ஒரு பெரிய மிருகமாக இருக்க வேண்டும் என்று நினைத்தான் ஜோஜி.

இதுபோன்ற பிராணிக்குப் பயந்துதான், அர்ச்சகரோ, பக்தர்களோ இங்கு இல்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

இப்போது, இவன் படுத்திருக்கும் இடத்துக்கு நேர் கீழே அந்தப் பிராணியின் உறுமல் கேட்டது.

சிறிது நேரத்தில் அந்தப் பிராணிக்கும் இன்னொரு பிராணிக்கும் சண்டை நடப்பது புரிந்தது. இரண்டு விலங்குகள் ஒன்றோடு ஒன்று கட்டிப்புரளுவது போலிருந்தது. ஜோஜிக்கு கதைவைத் திறந்து பார்க்கப் பயமாக இருந்தது.

திடீர் என ஒரு பெருத்த ஒலி. அதுவும் கொஞ்ச நேரத்தில் நின்று போனது. ஜோஜிக்கு உள்ளூர நடுக்கம்.

அந்த மிருகம் நாம் கீழே இறங்கி வரக் காத்திருக்கிறதோ? என்று நடுங்கினான். தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தான்.

சில மணி நேரங்களில் விடிந்துவிட்டதற்கான அறிகுறி தெரிந்தது.

சூரியக்கதிர்கள், கதவைத் தாண்டி உள்ளேபுகுவதை உணர்ந்தான்.

மெதுவாக கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

இறங்கியதும் அவன் கண்ட காட்சி அதிரவைத்தது. அங்கே, பிரம்மாண்டமான எலி ஒன்று செத்துக்கிடந்தது. அது, ஒரு கன்றுக்குட்டி அளவுக்குப் பெரியதாக இருந்தது.

இந்த எலி, எந்த மிருகத்துடன் சண்டை போட்டு மடிந்திருக்கும்? என்று சுற்று முற்றும் பார்த்தான் ஜோஜி. திரைச்சீலைகள், அதில் அவன் வரைந்த சின்னதும் பெரியதுமான பூனைகள்... அவன் வரைந்த பெரிய பூனைப் படத்தைப் பார்த்தான்.

இந்தப் பூனையின் தலையை, வலது பக்கமும் வாலை, இடது பக்கமும் அல்லவா வரைந்திருந்தேன். இப்போது தலை, இடது பக்கமும் வால், வலது பக்கமும் திரும்பியிருக்கிறதே' என நினைத்தவனுக்கு இரவில் என்ன நடந்தது என்பது புரிந்துவிட்டது.

நீதான் இந்த எலியிடமிருந்து என்னைக் காப்பாற்றினாயா? கீழே இறங்கிக் காரியத்தை முடித்துவிட்டு மீண்டும் மேலே ஏறிக்கொண்டாயா? என்று கேட்டான்.

அந்தப் பூனையின் பாதங்களைக் தடவி, என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி பூனையாரே என்றான் ஜோஜி. அப்போது, கோயில் அர்ச்சகர் மற்றும் பொதுமக்களில் சிலர் அங்கு வந்தனர். அந்தக் கிராமத்துக்கே சவாலாக இருந்த எலி, இறந்துகிடப்பதையும் ஜோஜி அதன அருகே நிற்பதையும் பார்த்தனர்.

நடந்ததை ஜோஜி அவர்களுக்கு விளக்கினான். ஜோஜியை, அந்தக் கோவிலில் அவன் விரும்பும்காலம் வரை வசிக்கலாம்' என்று அர்ச்சகர் சொன்னார். ஜோஜிக்கு மகிழ்ச்சி. அங்கேயே தங்கி படங்களை வரைந்தான். மிகச் சிறந்த ஓவியன் ஆனான்.' அனைத்து நாடுகளும் அவனைக் கௌரவித்தன.

(முற்றும்)




- 1574 - சிலியின் ஜுவான் பெர்னாண்டஸ் தீவுகள் கண்டு பிடிக்கப்பட்டன.
- 1908 - அல்பேனிய எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1922 - துட்டன்காமுன் என்ற எகிப்திய பாரோவின் 3,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமாதி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1935 - பசிபிக்பெருங்கடலைத் தாண்டி முதன்முறையாக விமானத் தபால்களை விநியோகிக்கும் பணியில் சைனா கிளிப்பர் என்ற விமானம் கலிபோர்னியாவை விட்டுப் புறப்பட்டது. (இவ்விமானம் நவம்பர் 29 இல் 110,000 தபால்களுடன் மணிலாவை அடைந்தது.)
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கிரேக்கப் படைகள் அல்பேனியாவுக்குள் நுழைந்து கோரிட்சாவை விடுவித்தனர.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய தளபதி பிரீட்றிக் பவுலஸ், ஸ்டாலின்கிராட்டில் தாம் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக ஹிட்லருக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பினான்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், சீனத் தலைவர் சியாங் காய்-செக் ஆகியோர் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சந்தித்தனர்.
- 1943 - லெபனான், பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1956 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மெல்பேர்ணில் ஆரம்பமாயின.
- 1974 - ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றது.
- 1975 - பிரான்சிஸ்கோ பிராங்கோவின் மறைவை அடுத்து ஜுவான் கார்லொஸ் ஸ்பெயின் மன்னனானார்.
- 1990 - மார்கரட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியைத் திறந்தார்.
- 2003 - ஜோர்ஜியாவில் அதிபர் எடுவார்ட் ஷெவர்நாட்சேயின எதிராளிகள் நாடாளுமன்றத்தைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து அதிபரைப் பதவி விலகுமாறு கோரினர்.
- 2005 - ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபராக (சான்சிலர்) ஏங்கலா மேர்க்கெல் தெரிவு செய்யப்பட்டார்.
- 2005 - எக்ஸ் பாக்ஸ் 360 நிகழ்பட விளையாட்டு இயந்திரம் வெளியிடப்பட்டது.
- 2007 - இலங்கை அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தடை விதித்தது.

### பிறப்புகள்

- 1830-ஜல்காரிபாய், இந்தியச் சுதந்திரப் போராட்ட வீராங்கனை (இ. 1890)
- 1890 - சார்லஸ் டி கோல், பிரெஞ்சுத் தளபதியும், அரசியலாளரும் (இ. 1970)
- 1939 - முலாயம் சிங் யாதவ், இந்திய அரசியல்வாதி
- 1970 - மாவன் அத்தப்பத்து, இலங்கையின் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1963 - ஜோன் எப். கென்னடி, 35ஆவது அமெரிக்க ஜனாதிபதி (பி. 1917)
- 1976 - மு. திருச்செல்வம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் (பி. 1907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



....ஆனால், அரையிறுதிப் போட்டியில் இந்தியா தோற்கவே ஆஸ்திரேலியாவும் இலங்கையும் இறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

இறுதிப்போட்டியில் இலங்கையை வீழ்த்தி ஆஸ்திரேலியா காமன்வெல்த் பேங்க் முத்தரப்பு போட்டிகளில் வெற்றி பெற்றது. சச்சினின் 100 ஆவது சதம் வழக்கம்போல இந்த முத்தரப்பு போட்டியிலும் நிறைவேற வில்லை.

இந்தியா, பாகிஸ்தான் இலங்கை மற்றும் வங்காளதேச அணிகளுக்கு இடையே வங்காள தேசத்தில் 2012 ஆசிய கோப்பைப் போட்டிகளில் 100 ஆவது சதத்தை அடித்து சச்சின் உலக சாதனை மார்ச் 11 இல் பாகிஸ்தானுக்கும் வங்காள தேசத்திற்கும் நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தான் 21 ரன்கள் வித்தியாசத்தில் ஜெயித்தது.

மார்ச் 13 இல் இந்தியாவிற்கும் இலங் கைக்கும் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா 50 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கம்பீர் மற்றும் கோலி தலா சதம் அடித்தனர். சச்சின் 6 ரன்கள் எடுத்தார். மார்ச் 15 இல் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் பாகிஸ்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!

தான் 6 விக்கெட் வித்தியாசத்தில் ஜெயித்தது. மார்ச் 16 இல் இந்தியாவிற்கும் வங்களாதேசத்திற்கும் நடைபெற்ற நான்காவது போட்டியில் வங்காளதேசம் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா தோற்றாலும் சச்சின் 114 ரன்கள் அடித்து 49 ஆவது ஒரு நாள் சதத்தை அடித்தார். இதன் மூலம் டெஸ்ட் போட்டியில் 51 மற்றும் ஒரு நாள் போட்டியில் 49 என மொத்தம் 100 சதங்களை சச்சின் அடித்துள்ளார். உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 100 ஆவது சதத்தை நீண்ட இடைவெறிக்குப் பின்னர் சச்சின் அடித்து ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்தார். யாருமே நெருங்க முடியாத சாதனையைப் படைத்தார். மார்ச் 18 இல் இந்தியாவிற்கும் பாகிஸ்தர்னுக்கும் இடையே நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கோலி 183 ரன்கள் எடுக்க சச்சின் 52 ரன்கள் எடுத்து வெற்றிக்கு தோள் கொடுத்தார். மார்ச் 20 இல் இலங்கைக்கு வங்காள தேசத்திற்கும் இடையே நடந்த ஆறாவது போட்டியில் வங்காள தேசம் 5 விக்கெட் வித்தியாசத்தில் ஜெயித்தது. மார்ச் 22 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் 2 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆசியக் கோப்பையைத் தட்டிச் சென்றது. 1990 14 ஆகஸ்ட் இங்கிலாந்திற்கு எதிராக தனது 1 ஆவது சதத்தை அடித்த சச்சின் 22 ஆண்டுகள் நீண்ட நெடிய பயணத்திற்கு பின்னர் 2012 மார்ச் 16 வங்காள .தேசத்திற்கு எதிராக தனது 100 ஆவது சதத்தை அடித்து உலகளாவிய சாதனையைப் படைத்துள்ளார். சாதனைகள் படைப்பது தகர்ப்பதற்காகவே என்று பழமொழி உண்டு. ஆனால் சச்சினின் சாதனையை யாராலும் உடைக்க முடியுமா என்பது கேள்விக்குறியே. இவருக்கு இரண்டாம் இடத்தில் இருப்பவருக்கும் இடையேயான இடைவெளி மிகமிக அதிகம் என்பதால் இவரது சாதனை இன்னும் பல பல ஆண்டுகளுக்கு முறியடிக்க முடியாத சாதனையாகவே இருக்கும் என்பது நிச்சயம்.



- லட்சியம்:- உலகின் நம்.1 விளையாட்டு வீரன்
- பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
- பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
- வேறு விளையாட்டு:-டென்னிஸ்
- கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
- வெறுப்பது:- வதந்தி
- பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
- பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
- பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு

கே.ரமேஷ் (முற்றும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி


## ஆன்மீகம் 82

## கவலைகள் இன்றி வாழ்தல்!

...உண்மையில் நிறைய கவலைகளுடன் இருக்கும் பொழுது ஒரு மனிதன் தன்னைப்பற்றி மிகவும் சந்தோஷமடைகிறான். ஏனெனில் அவனது அஹங்காரம் நிறைய கவலைகளை நிர்வகிக்கும் திறமை பற்றிச் சந்தோஷமடைகிறது. அதனால்தான் பல சமயங்களில் நீங்கள் உங்கள் கவலைகளைப் பற்றி யாரிடமாவது பேசினால் உடனே அவர்கள் ஆ! இது ஒன்றுமில்லை என்னுடைய பிரச்சினைகளை கேளுங்கள்; அப்பொழுதுதான் உங்களுக்குத் தெரியும் என்று சொல்வதைக் கண்டிருப்பீர்கள். ஏனெனில் மக்கள் மிகப்பெரிய கவலைகளை சுமப்பதை உயர்வாக கருதுகிறார்கள்.

எப்பொழுதும் கவலைகளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதால்,என்ன நிகழ்ந்து விடப் போகிறது? ஒன்றுமில்லை. உங்களுடைய பத்து கவலைகளுடன் பதினொராவது கவலையாக மனச்சோர்வு சேர்ந்து கொள்ளும்; அவ்வளவுதான்.

நாம் வேலை செய்யும் பொழுது கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தெளிவாக இருங்கள்... கவலையிருக்கும் பொழுது உங்களால் வேலை செய்ய முடியாது. உண்மையிலேயே நீங்கள் வேலை செய்யும் பொழுது கவலைப்பட முடியாது. கவலையிருக்கும் இடத்தில் படைத்தல் நிகழ முடியாது. படைத்தல் நிகழும் இடத்தில் கவலை இருக்க முடியாது. ஒரு சமயத்தில் படைப்போ அல்லது



கவலையோ மட்டும்தான் இருக்க முடியும். ஒருபோதும் இரண்டும் சேர்ந்திருக்க முடியாது. [illegible] மையான வழிபாடு. படைக்கும் பொழுது நீங்கள் கடவுளுக்கு மிக அருகாமையில் இருக்கிறீர்கள். படைப்பு இதயத்திலிருந்து வருகிறது. கவலை மனதில் இருந்து வருகிறது.

இறந்தகாலத்தின் பின்னால் செல் [illegible] பொழுது அல்லது எதிர்காலத்தைப் பற்றி நினைக்கும் பொழுது நீங்கள் நிகழ்காலத்தை தவறவிட்டு விடுகிறீர்கள். ஆன்மீகம் என்பது இறந்தகாலத்தை விட்டுவிட்டு நிகழ்காலத்தில் வாழ்வது. தற்சமயம் நீங்கள் இறந்தகாலத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் சுமையை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. அதனால் நீங்கள் சதுப்பு நிலத்தில் மாட்டிக் கொண்டு விட்டத்தைப்போல உணர்கிறீர்கள்.

உங்களுக்கு உங்களுடைய இறந்தகாலச்சுமையை எவ்வாறு இறக்கி வைப்பது என்று தெரியவில்லை. உங்களுக்கு அதை எவ்வாறு சுமந்து செல்வது என்று மட்டுமே தெரியும்.

நீங்கள் இதனை உங்களுடனேயே சுமந்து செல்ல வேண்டும். என்று கருதுகிறீர்கள். சமூகம் அதை உங்களுடன் சுமந்து செல்லவே கற்றுக் கொடுத்திருக்கிறது. நீங்கள் அதை விட்டுவிட முயற்சி செய்தால், குற்ற உணர்வுடன் இருக்க கற்றுக் கொடுத்திருக்கிறது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணை நிரம்பியது; பொய்மை தோற்றது!

பெரியாறு அணை கட்டப்பட்டு 90 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. மிகப்பழைமையான இந்த அணை எந்த நேரத்திலும் இடிந்து விழலாம். அவ்வாறு நேர்ந்தால் கேரளத்திலுள்ள ஐந்து மாவட்ட மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாவார்கள் பல இலட்சம் மக்கள் உயிரிழப்பார்கள்" என 1963 ஆம் ஆண்டில் மலையாள வாரஇதழ் ஒன்று முற்றிலும் பொய்யான செய்தியைப் பரப்பியது. இதற்குப் பின்னணியில் கேரள அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் இருந்தார்கள்.

கேரள அரசின் முறையீட்டிற்கு செவிசாய்த்த இந்திய அரசு, மத்திய நீர்ப்பாசன ஆணையத் தலைவர் தலைமையில் கேரள - தமிழக தலைமைப்பொறியாளர்கள்கொண்ட ஒரு குழுவை அனுப்பி, அணையின் நிலைமையை ஆராயச் செய்தது. இக்குழுவினர் அணையை சோதித்துப் பார்த்து, அணை நல்ல நிலைமையில் இருப்பதாக அறிக்கை அளித்தனர்.


ஆனால், மீண்டும் 1978-ஆம் ஆண்டு கேரள அரசு இதே பொயயானப் புகாரை எழுப்பியது. இந்திய அரசு அணையைப் பரிசோதிக்க மத்திய நீர்ப்பாசன ஆணையத்தின் அதிகாரியை அனுப்பியது. அந்த அதிகாரி திருவனந்தபுரத்திலிருந்து பெரியாறு அணையை நோக்கிச் சென்ற வழிநெடுகிலும், பெண்கள் திரண்டு வந்து, அழுது புலம்பினர்.

இது ஒரு திட்டமிட்ட நாடகம் என்பதை உணராத அந்த அதிகாரி, அணை நல்ல நிலைமையில் இருந்த போதிலும் கேரள மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அணையின் நீர் மட்டத்தை 152 அடி உயரத்திலிருந்து 145 அடியாக குறைக்கும்படி கூறினார்.

அதை தமிழக அரசும் ஏற்றுக கொண்டு அவ்வாறே செய்தது.

1979-ஆம் ஆண்டு மீண்டும் இதே பொய்மைக் கூப்பாட்டை கேரளம் எழுப்பியது. மத்திய பாசன ஆணையத்தின் அப்போதைய தலைவர் டாக்டர் கே.சி. தாமஸ் பெரியாறு அணைக்கு வந்து அதைப்பரிசோதித்தார். அணை உறுதியாக இருந்தபோதிலும் மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அணையை மேலும் வலுப்படுத்த சில யோசனைகளை கூறினார்.

அணையை வலுப்படுத்தும் வேலைகள் முடியும் வரை அணையின் நீர்மட்டத்தை 136 அடியாகக் குறைக்க வேண்டும் என அவர் கூறிய அறிவுரையை ஏற்று தமிழக அரசும் அணையின் நீர்மட்டத்தைக் குறைத்தது.



ரூ.12.5கோடிசெலவில்அணையை வலுப்படுத்த தமிழக அரசு செய்த முயற்சிகளுக்கு, தொடர்ந்து கேரள அரசு முட்டுக்கட்டை போட்டது. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது.

உச்சநீதிமன்றம் தலையிட்டு, "அணையை பலப்படுத்தும் வேலையைத் தடுக்கக்கூடாது. மத்திய நீர்வள ஆணையம் அளித்த பரிந்துரையில் அணையை மேலும் பலப்படுத்த தமிழக அரசுக்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம். அதற்குக் கேரளம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்" என ஆணைப் பிறப்பித்தது. தமிழக அரசு 10 ஆண்டு காலத்திற்கு மேலாக பணி செய்து அணையை வலுப்படுத்தியது.

கேரள அரசியல்வாதிகள், 'பெரியாறு அணைப் பகுதியில் சிறிய அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதைப் பயன்படுத்தி, மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டால் அணை தகர்ந்து எந்த நேரமும் பேரழிவு ஏற்படலாம் என்ற அச்சத்தை மக்களிடையே பரப்பினர்.

அதுமட்டுமல்ல, நில நடுக்கம் ஏற்பட்டு அதன் விளைவாக அணை இடிந்து வெள்ளப் பெருக்கில் இலட்சக்கணக்கான மக்கள் செத்து மிதப்பது போன்ற பொய்யான குறும்படம் ஒன்றைத் தயார் செய்து மக்களை அதிர்ச்சியடைய வைத்தார்கள்.

உச்சநீதிமன்றத்திலும் முறையிட்டார்கள். உச்சநீதிமன்றம் அமைத்த குழு மீண்டும் அணைப் பகுதியை சோதனை செய்து 12-12-2000 அன்று ஏற்பட்ட நில நடுக்கத்தின் விளைவு பெரியாறு அணையிலோ அங்குள்ள மற்ற கட்டடங்களிலோ உணரப்படவில்லை என்ற உண்மையை உணர்ந்து, கேரள அரசின் பித்தலாட்டத்தை கண்டித்தது.

அதன் பின்னர், கேரள அரசியல்வாதிகள் பெரியாறு அணைக்குப் பதில் புதிய அணை கட்டுவது தான் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என கூற ஆரம்பித்தார்கள். தமிழகத்திற்கு அளிக்கப்படும் தண்ணீரை கொஞ்சம்கூட குறைக்காமல் அளிப்பதாகவும் வாக்குறுதி வழங்கினார்கள். 999 ஆண்டுகளுக்கு செய்யப்பட்ட உடன்பாட்டையே மதிக்க மறுத்தவர்கள், அந்த உடன்பாட்டைச் செல்லாத தாக்க, இந்த குறுக்கு வழியைக் கண்டுபிடித்தார்கள்.

கேரள அனைத்துக் கட்சித் தூதுக்குழு இந்தியப் பிரதமரை சந்தித்து புதிய அணை குறித்து தமிழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராக இருப்பதாகக் கூறினர். அதை ஏற்று பிரதமரும் பேச்சு நடத்துமாறு தமிழகத்திற்கு கூறினார்.

ஏற்கெனவே, 50 தடவைகளுக்கு மேல் கேரளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணாத நிலையில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தமிழகம் முன்வந்தது. ஆனாலும், பயன் எதுவும் விளையவில்லை.

எனவே உச்சநீதிமன்றம் தலையிட்டு, முன்னாள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் மூவர் குழு ஒன்றை அமைத்தது. இதில் கேரளத்தைச் சேர்ந்த நீதிபதி கே.டி. தாமஸூம் அங்கம் வகித்தார்.

உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இந்த உயரதிகார குழு, பெரியார் அணையை 5-1-2011 அன்று பார்வையிட்டது. பிறகு, இக்குழு மத்திய மண் விசை இயல் ஆராய்ச்சியின் மூலம் பெரியாறு அணையில் நடத்தப்பட்ட சோதனை முடிவுகளையும் ஆராய்ந்து ஏற்றுக் கொண்டது.

"எல்லா வகையிலும் பெரியாறு அணை வலிமை மிக்கதாக இருக்கிறது. எனவே, அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்தலாம்" என இக்குழு உச்சநீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்தது.

அதை ஏற்றுக்கொண்டு 27-2-2006 அன்று அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள உச்சநீதிமன்றம் ஆணை வழங்கியது. ஆனால், அதை உடனடியாக நிறைவேற்றாமல் தமிழகம் மெத்தனம் காட்டியதால் வேண்டாத விளைவுகள் ஏற்பட்டன.

இந்தத் தீர்ப்பை தமிழகம் நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக, கேரளம் நதிநீர்ப் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை கொண்டுவந்து நிறைவேற்றியது. இச்சட்டம் செல்லாது என மறுபடியும் உச்சநீதிமன்றத்தில் முறையிட நேர்ந்தது.

அதன் விளைவாக எட்டு ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டு இறுதியாக 142 அடி உயரத்திற்கு நீர்மட்டத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்ற தீர்ப்பைப் பெற்றனர்

இந்தச் சூழ்நிலையில், நீர்மட்டத்தை உயர்த்தி அது 142அடியை நெருங்கியபோது அதைத் தடுக்க கேரளம் மறுபடியும் உச்சநீதிமன்றத்தையும் இந்திய அரசையும் ஏமாற்றும் முயற்சிகளில் இறங்கியது.

1. பெரியார் அணையின் நீர்மட்டம் 142 அடி உயரத்தை எட்டிவிட்டால் மிகைநீரின் அழுத்தம் காரணமாக பலவீனமான அணை உடைந்துவிடும் என இதுவரை கேரளம் கூறிய காரணம் பொய்த்துப் போகும். எனவே, இதைத் தடுப்பதற்காக உச்சநீதிமன்றத்தில் முறையிட கேரளம் முடிவு செய்துள்ளது.

2.அணை உறுதியாக இருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிடும். அதைத் தொடர்ந்து 152 அடி வரை நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டுவிடும்.

3. 136 அடியாக நீர்மட்டம் குறைக்கப்பட்டபோது, அணையின் உட்பக்கத்தில் தங்கும் விடுதிகளையும், கேளிக்கை விடுதிகளையும் அமைத்துக்கொள்ளுமாறு கேரள தொழிலதிபர்களைத் தூண்டி அவர்களும் அவ்வாறே அமைத்தார்கள்.

இப்போது 142 அடியாக நீர்மட்டம் உயர்ந்துவிட்ட பிறகு அந்தக் கட்டடங்கள் நீரில் மூழ்கத் தொடங்கியிருக்கின்றன. அப்படியானால் அவையெல்லாம் அணையின் நிலத்தை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டவை என்பது நிரூபணமாகிவிடும்.

இதற்கிடையில் 17-11-2014 அன்று பெரியாறு அணைப் பகுதிக்குள் கேரள சட்டமன்ற பெண் உறுப்பினரான பிஜுமோள் தலைமையில் ஒரு கூட்டம் புகுந்து தமிழக அதிகாரிகளைத் தாக்கி விட்டு பேபி அணையை சேதப்ப டுத்த முயன்றுள்ளனர். கேரள போலீசார் அதைத் தடுக்காமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்திய அரசு இனியும் வேடிக்கைப் பார்க்காமல் உடனடியாக மத்திய காவல் படையை பெரியாறு அணைப் பகுதிக்கு அனுப்பி அதைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கச் செய்ய வேண்டும்.

35 ஆண்டு காலமாக தமிழகம் பொறுமையுடன் சட்டரீதியான முறையிடல்களில் தனது உரிமையை நிலைநாட்ட முயற்சி செய்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வெற்றிபெற்றிருக்கிறது.

அந்த வெற்றியை காலித்தனத்தின் மூலம் தட்டிப்பறிக்க கேரள அரசியல்வாதிகள் முயல்கிறார்கள். பெரியாறு அணைக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கு கேரள அரசியல்வாதிகளே பொறுப்பாவார்கள்.

கடந்த 35 ஆண்டு காலமாக தமிழகம் பேரிழப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

அணையின் நீர்மட்டம் 136 அடியாகக் குறைக்கப்பட்ட பிறகு பாசனத்திற்கு நீரில்லாமல் தரிசாக மாறிய நிலப்பரப்பு 38 ஆயிரம் ஏக்கர் இருபோகமாக இருந்து ஒருபோக சாகுபடியான நிலப்பரப்பு 26 ஆயிரம் ஹெக்டேர் ஆழ்துளைப் பாசனத்திற்கு மாறிய பாசனப் பரப்பு 53 ஆயிரம் ஏக்கர் விவசாய உற்பத்தி இழப்பு ஆண்டுக்கு ரூ.55 கோடி மின்னுற்பத்தி இழப்பு ஆண்டுக்கு ரூ.75 கோடி.

பயன்படுத்தாத நிலப்பரப்புக்கு கூடுதல் குத்தகைப் பணம், கேரள போலீஸாருக்கு ஊதியம், வழக்குச் செலவு இவை எல்லாவற்றையும் சேர்த்தால், கடந்த 35 ஆண்டு காலத்தில் தமிழகம் ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இழந்திருக்கிறது.


இந்த இழப்பை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு கேரளத்திற்கு உண்டு. அதை இந்திய அரசு தலையிட்டு பெற்றுக் கொடுக்க வேண்டும். அது இந்திய அரசின் கடமையாகும்.

-பழ. நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள் -27

## கல்மடுநகரில் மூலிகைத்தோட்டமும் மூலிகைசார் தொழில்நுட்பமும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் என் இனிய உறவுகளே...

இயற்கை தந்த வளங்களுள் அளப்பரியது தாவரசாம்ராஜ்யம் என்றால் மிகையாகாது. இதனை மணிவாசகப்பெருமான் சிவபுராணத்தில் புல்லாகிப் பூண்டாகி என்றாகி..இத்தாவர சங்கமத்துள்... என விளித்து அனைத்தும் அதனுள் அடக்கம் என எடுத்தியம்பியதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இவ்வளவு எளிமையாக எடுத்துக்கூறியிருக்கும் அதிசயத்தை எமக்கு கிடைத்த இவ்வாறான பொக்கிஷங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். எந்த வகைத்தாவரமாக இருந்தாலும் ஒவ்வொன்றிற்கும் தனித்துவமும் தனியியல்பும் உண்டு. இதனை நாம் முழுமையாக அறிந்து கொள்ளாதவரை அவற்றின் பயன்பாட்டை நாம் பெற்றுக்கொள்ள முடியாது.

மேலே குறிப்பிட்டது போன்று ஒவ்வொரு தாவரத்திற்கும் ஒவ்வொரு சக்தியுண்டு. அதனை அவற்றுக்கு இயற்கை கொடுத்திருப்பது அவற்றுக்கான அடையாளத்தை அங்கீகரிப்பதற்காகவாகும். இது போல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தனித்துவமான சக்தியுண்டு. அதனை அவனால் சரிவர இனங்காணும் வரை அவனால் எதுவுமே செய்ய முடியாது. உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்.. இவ்வுலகத்தில் உயர்வடையலாம் என்பதன் அர்த்தமும் இதுதானே. தாவரங்கள் இதுபோன்ற சக்தியை தமது வாழ்க்கைப் போராட்டத்திற்காக தப்பிப்பிழைப்பதற்காக பயன்படுத்துகின்றன. எனவே தாவரங்களுள் ஒளிந்திருக்கும் இந்த சக்தியைப் பயன்படுத்தியவர்கள் நாம் போற்றி வணங்கும் சித்தர்கள். தாவரங்களை மூலிகைகளாக வகைப்படுத்தியவர்கள் அவர்கள். தான். இங்கே மூலிகைகள் எனும் போது அவற்றுக்கான சிறப்பியல்புகளை இனங்கண்டு அவற்றை மருத்துவத் தேவைகளுக்காக பயன்படுத்தியவர்கள். தாம் ஆய்வு செய்து பயன்படுத்திப்பார்த்து கைகண்டது என அதனை பனையோலையில் ஆவணமாக்கியுள்ளனர். மூலிகைகளிலுள்ள இரசாயனப்பதார்த்தங்களின் பயன்பாடே மருந்தாகும். இயற்கையன்னை தாவரங்களுக்கூடாக எமக்கு தந்த இரசாயன பதார்த்தங்கள் தான் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு இன்னும் சித்த வைத்தியத்தில் இனங்காணப்பட்டு மருந்தாக பயன்படுத்தப்படுகின்றன. இம்மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கும் அதனை மதிப்பேற்றஞ்செய்து மருந்தாக இங்கிருந்து உலகத்தை வலம் வரும் நாளை எதிர்நோக்கியிருக்கின்றோம். தனியார் நிறுவனமான பியோரெக்கின் உற்பத்திப்பொருட்களாக சிறுகுறிஞ்சா இலை பதப்படுத்தப்பட்டு பக்கெட் செய்யப்பட்டு உலகநாடுகளின் சந்தைக்கு விற்பனைக்கு விடப்படவேண்டுகின்றது இதற்கொரு சிறந்த உதாரணமாகும். இதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். மூலிகை தாவர உற்பத்தியில் எமது பிரதேசத்தை முன்னெடுக்க வாய்ப்புண்டு. ஐரோப்பிய நாடுகளில் அதற்கான வழிமுறையை செய்து மூலிகைத்தாவ பொருட்களை சநதைப்படுத்துவதில் முன்னுரிமை கொடுக்கும் போது புலம்பெயர்ந்த மக்கள் இந்த சந்தைப்படுத்தலை செய்யலாம். அவர்களுடைய அனுபவம் இதற்கொரு வளமாக இருக்கும்.





இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVI

மூலிகைத்தாவரங்களிலிருந்து பெறப்படும் பொருட்களின் தரம் நிர்ணயஞ்செய்யப்படுவதற்கான தொழில் நுட்ப வசதிகள் செய்யப்பட வேண்டும். தரநிர்ணயஞ்செய்யும் நிறுவனங்கள் வடபகுதியில் உருவாக்கப் படவேண்டும்.

வடமாகாண சுதேச வைத்தியத்துறைக்கு இன்னும் வாய்ப்புக்களும் நிதியுதவியும் கிடைக்கப்பெற்றால் அது வடமாகாண மக்களுக்கான சொத்தாக, சுதேச வைத்தியத்திற்கான இன்னொரு பரிமாணத்திற்குள் உள்வாங்கப்பட்டு மருத்துவத்துறையில் சாதனைகளை செய்யும் என்பது திண்ணம். சேதன முறை பயிர்ச்செய்கையினை முன்னிலைப்படுத்தும் இயற்கை விஞ்ஞானம் அதற்கான அடித்தளத்தையும் வடமாகாணத்தில் இடவேண்டும். இப்போது முருங்கை பல இடங்களில் பயிர்செய்யப்படுகின்றது. கறிமுருங்கையின் இலையிலுள்ள நுண்சத்து குறிப்பாக இரும்புச்சத்து பெண்களுக்கும் அதிலும் கர்ப்பிணிப்பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அவசியமானதாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் கறிமுருங்கையை பாரியளவில்பயிர்செய்து அதனது இலையை ஐரோப்பா உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும். வெளிநாடுகளில் கேள்வி அதிகமாக உள்ள தாவரமாக முருங்கையிருப்பதும் எமது மணற்பாங்கான பகுதிகளில் இதனை சிறப்பாக பயிர்செய்யக்கூடியதாக இருப்பதும் எமக்கான தொழிற்றுறைக்கான வழிகாட்டலாகும். ஐரோப்பாவில் சிறந்த சந்தைப்படுத்தலில் விற்பன்னர்களாயிருக்கும் எம்மினிய உறவுகள் இந்த அபிவிருத்திக்குள் உள்வாங்கப்படலாம். எம்மக்களின் உற்பத்திக்கு சந்தைப்படுத்தல் மிகப்பெரும் பிரச்சினையாக இருக்கின்ற நிலையில் இதற்கான உந்து சக்தியாக தொழிற்படலாம்.

மூலிகைகள் மருந்தாக பயன்பட்ட போதும் அன்றாடம் நாம் உண்ணும் உணவில் அவை இருக்கத்தான் செய்கின்றன. அளவு குறைவாக உள்ளெடுக்கப்படுகின்றமையால் அது உணவாகின்றது. அளவு அதிகரித்து செறிவாக்கப்பட்டால் மருந்தாகின்றது. அதனால்தான் உணவே மருந்து, மருந்தே உணவு என்றார்கள்.

இவ்வாறான மூலிகைத்தாவரங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் இயற்கையுடனான வாழ்க்கை முறைக்குள் மீளவும் நாம் பயணிக்கவேண்டிய கட்டாய சூழலில் இத்தாவர வகைகளைப்பற்றி சிந்திப்பது சாலப்பொருந்தும். அவற்றனுள்ளே பொதிந்திருக்கும் தொழில நுட்பத்தை நாம் தெரிந்து கொண்டால் அதனை நாம் முறையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இன்னும் அதனை தொழிற்றுறையாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

வடமாகாண சுதேச வைத்தியத்துறையின் முழுமுயற்சியினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இத்தாவர வளங்களின் பெறுமதியை எடுத்தியம்ப மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அராலியில், நவக்கிரியில் இன்னும் விவசாய திணைக்களத்துடன் சேர்ந்து திருநெல்வேலி விவசாய பண்ணையில் இவை உருக்கொண்டுள்ளன. இம்மூலிகை தாவரங்களின் பயன்பாட்டை, தாவரம் பற்றிய விளக்கங்களை, இயல்புகளை அவர்களிடம் பெற்று பயன்பெறலாம். இதுபோன்ற இன்னொரு முயற்சியே கல்மடு நகரில் அமையப்பெற்றிருக்கின்ற மூலிகைத் தோட்டம். கல்மடுநகருக்கென்று சிறப்புண்டு. கல்மடுக்குளம் இதற்கான நீரை வழங்கும் வரப்பிரசாதம். எமது பிரதேசத்தில் நடைபெற்ற போருக்குள் சிக்கி சின்னாபின்னமான ஊராகவும் இருக்கின்றது. அழிவுகளுக்குள்ளிருந்து மீண்டு தற்போது கல்மடு நகர் விருத்தியடையத் துடித்துக்கொண்டிருக்கின்றது. இங்கே அமையப் பெற்றிருக்கும் மூலிகைத்தோட்டம் இதற்கொரு உதாரணமாயிருப்பினும் இத்தோட்டம் மூலிகை [illegible] இங்கு [illegible] மக்களுக்கு வேலைவாய்ப்பையும் ஏனையோருக்கு பயன்பாடாகவும் அமையப்பெறும் என எண்ணுவோம். கல்மடு நகரில் 1992ஆம்ஆண்டில்உருவாக்கப்பட்ட இம்மூலிகைத்தோட்டம் இடப்பெயர்விலும் அதையொட்டி நடந்து முடிந்த சமரிலும் பாதிக்கப்பட்டு அழிவுறும் நிலையிலிருந்தபோது இக்கிராம மக்களின் முன்முயற்சியினால் இருந்த தாவரங்கள் பாதுகாக்கப்பட்டு பின்னர் வடமாகாண சுதேச மருத்துவத்துறையின் முயற்சியினால் மீளவும் உயிர்பெற்றிருக்கின்றது. மொத்தமாக 100 ஏக்கர் காணியில் கல்மடு நகர் குளத்திலிருந்து நீர் பெறுவதற்கும் வசதியிருக்கின்றது. அதுதவிர கல்மடு நகரில் உள்ள மக்களும் முழுமுயற்சியுடன் தமது கிராமத்தை முன்மாதிரியான கிராமமாக தொழிற்றுறையில் வளம்பெற்ற தொழில்கிராமமாக மாற்ற ஆவல் கொண்டு முழுமுயற்சியும் எடுத்து வருவது பாராட்டத்தக்கது. ஆனால் இவர்களை நோக்கி எந்தவிதமான பாரிய அபிவிருத்தி முயற்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்ற ஆதங்கமும் பலரிடம் காணப்படுகின்றது. பரந்தன் ,முல்லைத்தீவு பாதையிலிருந்து தருமபுரம் வைத்தியசாலையின் அருகாக செல்லும் அக்கிராமத்திற்கான பாதை செப்பனிடப்பட வேண்டும். முழுக்கிராமத்தையுமே தொழில்கிராமமாக மாறறத்துடிக்கும்மக்களுடன்இணைந்து நாமும் முயற்சி செய்வோம். இக்கிராமத்து வளங்களை முழுமையாக இனங்கண்டு கிராமத்தின் விடியலை எதிர்கொள்ளுவோம். மூலிகைத்தோட்டம் மீள உருவாக்கப்படுவதனால் இக்கிராமத்தை நோக்கி அனைவரதும் கண்கள் குவியத்தொடங்கியிருக்கின்றன. இங்குள்ள மக்களின் வாழ்வியலில் இம்மூலிகைத்தோட்டத்தின் மீளமைப்பு நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம். தொழில் முயற்சியாளர்கள் இக்கிராமத்தை முன்மாதிரியான தொழில்நுட்ப கிராமமாக்கி இங்குள்ள மக்களுக்கு தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக்கொடுக்க முன்வரவேண்டும். மகிந்த சிந்தனையில் எடுத்தியம்பியுள்ள செயற்றிட்டங்களை இங்கே உள்வாங்கிக் கொள்ளலாம். எந்த செயற்றிட்டமுமே மக்களின் ஒத்துழைப்பின்றி, கூட்டுமுயற்சியின்றி வெற்றியளிக்காது. ஆனால் உயர்வடையத் துடிக்கும் கல்மடுநகர் மக்களின் வாழ்வியலுக்கு வழிசெய்து கொடுக்க வேண்டும். கிராமத்து எழுச்சியே நாட்டின் உயர்ச்சி. ஒவ்வொரு கிராமமும் தமது பங்களிப்பை முழுமையாக நல்கும் போது வடமாகாணத்து மொத்த அபிவிருத்தியின் சுட்டெண் மற்றைய மாகாணங்களின் நிலைக்கும் அதற்கு மேலும் உயர்வடையும்.

கல்மடு நகரிலமையும் மூலிகைத்தோட்டம் 100ஏக்கர் பரப்பு நிலப்பரப்பைக் கொண்டிருப்பினும் ஆரம்பகட்டமாக 30 ஏக்கர் பரப்பில விதம்விதமான மூலிகைத்தாவரங்கள் நடுகைசெய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழவிருக்கின்றது. மூலிகைகளின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும் களமாகவும் மூலிகை மருத்துவத்தை உணர்ந்து கொள்ளும் இடமாகவும் இவ்விடம் முக்கியத்துவம் பெறும். மூலிகை சார்ந்த ஆய்வு மாநாடும் விரைவில் நடைபெறவிருக்கும் நிலையில் இம் மூலிகைத்தோட்டத்தின் வளர்ச்சி இந்நகரில் வாழும் மக்களுக்கு வாழ்வாதாரத்தை அபிவிருத்திசெய்யும் வழிகாட்டியாக இருக்கும் என்பது எதிர்பார்ப்பாகும். சித்தவைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு இம்மாதிரியான மூலிகைத்தோட்டங்கள் மிகமிக அவசியமானவையாகும். அத்துடன் பரந்து பட்ட நிலப்பரப்பில் மூலிகை மருத்துவத்தைப் பெறுவதற்காக வழிவகைகளும் செய்யப்பெற்றால் அது மக்களுக்கான சுகாதாரத்தை மேம்படுத்துவதையும் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்திசெய்வதையும் கண்கூடாக காணலாம். தொழில்நுட்பத்தை கிராமத்தை நோக்கி நகர்த்த வேணடியது மிகமுக்கியமானதாகும். கிராமங்களின் எழுச்சி அதிலேயே தங்கியிருக்கின்றது. கல்மடு நகர் இந்த மாற்றத்தை உள்வாங்க துடித்துக்கொண்டிருக்கின்ற ஆய்வாளர்களே, தொழிற்றுறை விற்பன்னர்களே, தொழிலநுட்ப விஞ்ஞானிகளே இங்கொரு கிராமம் புத்துணர்ச்சியுடன் முனைப்புப் பெற முயன்று கொண்டிருக்கின்றது. இது உங்களுக்கான இடம். எதிலும் இங்குள்ள மக்களின் தொழில்வாய்ப்பும் தொழில் விருத்தியும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

இங்கே ஒரு மூலிகை மருத்துவ கிராமம் உருவாக்கப்படுகின்றது. இது வடமாகாணத்திற்கான வரப்பிரசாதமாகவும் அமையும். யாழ்ப்பாண பல்கலைக்கழத்தின் சித்தவைத்திய அலகு சித்தவைத்திய நிறுவனமாக தரமுயரும் நிலையில் இன்னொரு பக்கத்தில் இவ்வாறான மூலிகைத்தோட்டங்கள் பரந்து பட்ட அளவில் அமையப்பெறுவதும் அவற்றின் பயன்பாட்டை மக்களனுபவிக்கும் அதேநேரத்தில் மக்களுக்கான வாழ்வாதாரமும் உயர்வடையும் என நம்பிக்கை கொள்வோம். எங்களூர் சித்த வைத்தியர்களினது கைவண்ணத்தை வெளிக்காட்டும் இடமாக இவ்விடம் அமையும். அதற்காக நாமெல்லோரும் இணைந்து செயற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார, மருத்துவ தகவல்களை வழங்குவதில் ஊடகங்கள், ஊடகவியலாளர்களின் பங்களிப்பு

சுகாதாரம் மற்றும் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை ஊடகங்கள் வழங்குகையில் அவை பொதுமக்களின் மனதிற் பதிந்து அவர்களது நடத்தையிலும் ஆரோக்கியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது சில வேளைகளில் நாட்டின் உற்பத்தித் திறன், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றையும் பாதிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. இதனால் சாதாரண தகவல்களை வழங்குவதைவிட சுகாதாரத் தகவல்களை வழங்குவதில் ஊடகவியலாளர்கள் அதிக கவனத்தையும் கண்ணியத்தையும் பேணவேண்டியது மிகவும் அவசியம்.

**பிரச்சினைகளுக்கு உரிய அளவில் முக்கியத்துவம் வழங்கல்**

நாட்டில் அதிகளவு மரணங்களையும் அதிகளவு வைத்தியசாலை அனுமதிகளையும் ஏற்படுத்தும் பொதுவான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஊடகங்களில் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் இளம் சந்ததியினரில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான பிரச்சினைகளாக அதிகரித்துவரும் புகைத்தலும் மதுபானப் பாவனையும் அவற்றினால் ஏற்படும் சுகாதார சமூக பொருளாதாரத் தாக்கங்களும் காணப்படுகின்றன.

தொற்றாநோய்களில் குருதிக் குழாய்களில் கொழுப்புப் படிவு காரணமாக ஏற்படும் இருதய இரத்த குழாய் நோய்கள், பாரிசவாதம், நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், இழுப்பு நோய் (asthma) புற்றுநோய் முதலியனவும் விபத்துக்களும் தற்கொலை முயற்சிகளும் மந்த போசணையும் மிகை போசணையும் முக்கியமானவையாக இருக்கின்றன.

தொற்று நோய்களில் வயிற்றோட்ட நோய்கள், டெங்கு, கசரோகம், சுவாசப்பையைத் தாக்கும் நியூமோனியா, வைரஸ் கிருமித் தாக்கங்கள் ஆகியவை அதிகளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இவற்றைவிட கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்படக்கூடிய சிக்கல்களாகிய குருதிச்சோகை, சிறுநீர்த் தொற்று போன்ற தொற்று நோய்கள், கர்ப்பகாலத்தில் ஏற்படும் உயர்குருதி அமுக்கம் மற்றும் நீ ழிவு உளச்சோர்வு ஆகியவையும் சேய்க்கு ஏற்படக்கூடிய சிக்கல்களாகிய கர்ப்பத்தில் வளர்ச்சி இன்மை, நிறைகுறைந்து பிறத்தல், குறை மாத பிரசவம் போன்றவையும் ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே ஊடகவியலாளர்கள் இந்தப் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவாக ஊடகவியலாளர்களின் செய்திகள் நகரப்பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள், பெரிய வைத்தியசாலைகளின் குறைபாடுகள் பற்றியவையாகவே இருக்கின்றன. உதாரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கவனம் செலு த்திவரும் ஊடகவியலாளர்கள் அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்ற தகுதி வாய்ந்த மருத்துவர்கள் காணப்படாத மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியான மருதங்கேணி போன்ற பிரதேசங்களில் காணப்படும் பிரச்சினைகளில் உரிய கவனம் செலு த்துவதில்லை. உண்மையில் ஊடகவியலாளர்கள் அடிப்படைச் சுகாதார வசதிகளற்ற கிராமப்புற பெருந்தோட்டப் புறப்பகுதிகளில் காணப்படும் குறைபாடுகளைப் பற்றியே அதிகளவு கவனம் செலுத்த வேண்டும்.

தற்கொலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதில் ஊடகவியலாளரின் பாரிய பொறுப்பு

**1.உணர்ச்சி மயப்படுத்தலை தவிர்த்தல்**


சுகாதாரத் தகவல்களைப் பொறுத்தவரையில் வியாபார நோக்கத்திற்காக உணர்ச்சி மயப்படுத்துதல் கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும். கடந்த காலத்தில் இலங்கையில் தற்கொலைகள் தொடர்பான தகவல்கள் உணர்ச்சிமயப்படுத்தப்பட்டதன் விளைவாக குறிப்பாக தற்கொலை செய்தவர்களை கதாநாயகர்கள் போல காட்டுவதனால் அவற்றைப் பின்பற்றி ஏனையோரும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.பிரதி செய்தலைத் தடுத்தல்**

தற்கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட நஞ்சு அல்லது தற்கொலை முறையை விபரமாக வெளிப்படுத்துவது தற்கொலை செய்ய விளையும் ஏனையோருக்கு பிரதி செய்ய வழிகாட்டுவது போலாகிவிடும் என்பதால் அந்த விபரங்களை தற்கொலை செய்த இடம் போன்ற படங்களை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

**3.களங்கத்தைத் தவிர்த்தல்**

தற்கொலை செய்யப்பட்டவரின் பெயர் விபரங்களை இயன்றவரை தவிர்ப்பது அவருடைய உறவினர்களுக்கும் நெருங்கியவர்களுக்கும் ஏற்படக்கூடிய மன உளைச்சலையும் களங்கத்தையும் குறைப்பதற்கு உதவும். உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று எண்ணும் ஊடகவியலாளர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்கள் உறவினர்கள் தற்கொலை செய்து கொண்டால் எவ்வாறு தாங்கள் நடந்து கொள்ள முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.



**4. முக்கியத்துவம் தவிர்த்தல்**

முன்பக்கச் செய்தியாக அல்லது ஆரம்பச் செய்தியாக தற்கொலையை வெளியிடுவது தவிர்க்கப்படவேண்டும். அதே வேளை தற்கொலை செய்தவர் எவ்வாறு அதை தவிர்த்திருக்கலாம் என்று ஆராய்ந்து செய்தி வெளியிடுவது ஊடகவியலாளரின் சமூகப் பொறுப்பை பிரதிபலிக்கும் நற்செயலாகும்.

**5.சமநிலை பேணுதல்**

வைத்தியசாலைகளின் குறைபாடுகள், நோயாளருக்கு ஏற்பட்ட மரணங்கள் பாதிப்புக்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது வைத்தியசாலைப் பொறுப்பாளர் மற்றும் நோயாளருக்குச் சிகிச்சை வழங்கிய மருத்துவரின் கருத்துக்களுக்குச் சமமான முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிடப்படவேண்டும். ஊடகங்கள் பல சந்தர்ப்பங்களில் ஒரு பக்கச் சார்பான நியாயங்களை மட்டும் வெளியிடுகின்றன என்ற ஆதங்கம் சேவை புரியும் மருத்துவர்கள் பலரின் மனதில் காணப்படுகின்றது.

**6.வியாபாரக் கட்டுரைகள்**

பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ள மருந்துப் பொருட்கள் தொடர்பாக பத்திரிகையின் இன்னொரு பகுதியில் சுகாதாரக் கட்டுரைகளை வெளியிடுவது மக்கள் மனதைக் குழப்பும் பத்திரிகை நெறிமுறைக்கு ஒவ்வாத செயலாகும். விளம்பரங்களைப் படிக்கும் மக்கள் அவற்றை விளம்பரமாகவே கருதும் அதேவேளையில் சுகாதாரக் கட்டுரைகளைப் படிக்கும் போது அவற்றைக் கூடுதலாக நம்பி ஏமாறுகின்றனர். எனவே விஞ்ஞான ரீதியாக நன்மைகள் நிரூபிக்கப் படாத காளான் குளிகைகள், பாலியல் சக்தியைக் கூட்டுவதாகக் குறிப்பிடும் மருந்துகள் போன்றவற்றைத் தயாரிக்கும் வியாபார நிறுவனங்களினால் வெளியிடப் படும் விளம்பரக் கட்டுரைகளை விளம்பரக் கட்டுரைகளாகவே குறிப்பிடுவது மிகவும் அவசியமாகும்.

**7.சுரண்டலைத் தடுத்தல்**

பல்தேசியகம்பனிகள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கு அவற்றின் நலன் காக்கும் வல்லரசுகள், உலக வர்த்தக ஸ்தாபனம் போன்றவற்றின் அழுத்தம் காரணமாக மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இலங்கையில் மிகவும் அதிக விலையில் விற்கப்படுகின்றன. இதன் காரணமாக பல ஏழை நோயாளிகள் உரிய மருந்துகளையும் சிகிச்சைகளையும் பெற முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. வறிய நாடுகளின் முதுகெலும்பில்லாத அரசியல் தலைமைகள் இந்தச் சுரண்டலைத் தட்டிக் கேட்க திராணியற்று இருக்கும் போது ஊடகவியலாளர்கள் இந்த அநியாயங்களை அம்பலப்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றான சுகாதார வசதி அனைவருக்கும் கிடைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்தல் வேண்டும்.

**8.மொழிபெயர்ப்புக்கள்**

பிற மொழிகளில் வெளியிடப்பட்ட சுகாதாரக் கட்டுரைகளை மொழிபெயர்க்கும் பொது சரியான தமிழ் வார்த்தைப் பிரயோகம் கவனத்துடன் செய்யப்படவேண்டும். உதாரணமாக காமாலை உடன் கூடிய ஈரல் அழற்சி நோயை மஞ்சள் காய்ச்சல் என்று மொழி பெயர்ப்பது மக்களை அநாவசிய பயத்துக்கு உள்ளாக்கும். மொழிபெயர்ப்பில் சந்தேகம் இருந்தால் ஒரு மொழி தெரிந்த மருத்துவரை அணுகத் தயங்கக்கூடாது.

**9.விஞ்ஞான நம்பகத் தன்மை**

ஆரோக்கியம் சம்பந்தமான தகவல்களை வெளியிடும்போது அவை அடிப்படை விஞ்ஞான தத்துவங்களுக்கு பொருத்தமாக இருக்கிறதா என்பதை ஊடகவியலாளர்கள் உறுதி செய்யவேண்டும். உதாரணமாக செங்கட்டியை மட்டும் உண்டு மூதாட்டி ஒரு வருடகாலமாக உயிர் வாழ் கிறார் என்று செய்தி வெளியிடும் போது அது ஊடகவியலாளரின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகிறது.

**10.தமிழ் ஊடகவியலாளரின் கடமை**

இன்றைய காலகட்டத்தில் போரின் விளைவுகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்மக்களை ஆரோக்கியமான பாதையில் இட்டுச் செல்வதற்கு ஊடகவியலாளர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த 3 தசாப்தங்களாக சுகாதாரச்சேவை அபிவிருத்தி திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டதா என்பதை ஊடகவியலாளர்கள் ஆராய்ந்து உண்மையை வெளிக்கொண்டுவரவேண்டும். அரசாங்க ஊழியர்கள் அரசசேவைநிர்வாகக் கோவையின் கீழ் ஊடகங்களுக்கு நேரடியாகச் செய்திகளை வெளியிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே ஊடகவியலாளர்கள் உரிய தரவுகளையும் புள்ளி விபரங்களையும் தேடி வெளியிட்டு உண்மை நிலையை அம்பலப்படுத்தவேண்டும்.

யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக பிரசாரம் மேற்கொ ள்ளப்படும் வேளையில் வடக்குக் கிழக்கில் வாழ்வாதாரம் அற்று ஆண் துணையின்றி பாதிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான விதவைகள், கணவன் இறந்துவிட்டாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா எ பதை அறிந்து கொள்ளமுடியாமல் தவிக்கும் அரை விதவைகள் மற்றும் இறந்தவரை நினைவுகூர முடியாமல் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கும் தமிழ்மக்களது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் உண்மையான உளவியல் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை ஊடகவியலாளர்கள் வெளிக்கொண்டு வரவேண்டும். இவ்வாறே பெருந்தோட்டப் பகுதியில் சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்த தகுதிவாய்ந்த மருத்துவர்களை நியமிக்காது சுகாதார சேவையில் காட்டப்படும் பாரபட்சம் திட்டமிட்ட கருவள அழிப்பு ஆகியவற்றை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்த ஊடகவியலாளர்கள் முன் வரவேண்டும்.

அண்மைக் காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கருவளக் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான கண் துடைப்பு விசாரணைகள் போன்ற இனஅழிப்பு நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் தொடர்ச்சியாக அவதானித்து அம்பலப்படுத்த வேண்டும்.

குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் மக்களின் சுகாதாரத் தேவைகள் போன்ற அடிப்படை நலன்களில் ஆர்வமின்றி தமது ஆசனங்களை உறுதிப்படுத்துவதில் மட்டுமே குறியாக இருக்கும் போது அருகிவிட்ட கருவளம் காரணமாக தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் ஊடகவியலாளர்கள் மீதே அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வகையில் மக்களை வழி நடத்த வேண்டிய பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் புனிதமான கடமையை உணர்ந்து ஊடகவியலாளர்கள் செயற்படுவார்களேயானால் அவர்களும் அவர்கள் சார்ந்திருக்கும் ஊடகங்களும் தமிழ்மக்களின் பெருமதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள் ஆவர்.

**வைத்தியகலாநிதி முரளி வல்லிபுரநாதன்**
**சமுதாய மருத்துவநிபுணர்**
**தலைவர், யாழ்ப்பாண மருத்துவச் சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய முறையில் செயற்படுகின்றார் மகிந்த

## அரசிலிருந்து விலகிய எம்.பி ஆதங்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஏகாதிபத்திய முறையிலேயே செயற்படுகின்றார். இது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாகும். அரசின் ஏகாதிபத்திய பலத்தை நான் எதிர்த்தமையால் கட்சிக்குள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அது தான் நான் அரசிலிருந்து வெளியேறுவதற்கு மிக முக்கிய காரணமாகும். இவ்வாறு ஆளுந்தரப்பிலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட வசந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் அவர் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டார்.

பின்னர் அங்கு நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கட்சி மாறியமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், எனது தனிப்பட்ட காரணங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள முடிவெடுக்கவில்லை.

இந்த அரசின் அண்மைக்கால செயற்பாடுகள் குறித்து எனக்கு எந்தவித நல்ல அபிப்பிராயமும் இல்லை. ஏகாதிபத்திய பாணியிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்படுகின்றார்.

சட்டத்துறை, பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகியன அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அவை சுதந்திரமான முறையில் செயற்படவிடாது அரசு அதற்குள் மூக்கை நுழைக்கின்றது.

இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்வது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாகும். அரசின் ஏகாதிபத்திய பலத்தை நான் எதிர்த்தமையால் கட்சிக்குள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதுதான் நான் அரசிலிருந்து வெளியேறுவதற்கு மிக முக்கிய காரணமாகும். அது மட்டுமல்லாது, தற்போதுள்ள அரசமைப்பை மாற்ற வேண்டும்.

18 ஆம் திருத்தச் சட்டம் ஜனாதிபதிக்கு மேலும் பலம் சேர்க்கின்றது, இந்த அரசமைப்பின் மூலம் ஜனாதிபதியை கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

இதனாலேயே நாட்டில் இன்று சட்டம் ஒழுங்கு மீறப்படுகின்றது. பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இந்த ஏகாதிபத்திய அரசைத் தோற்கடிக்க என்னால் இயன்ற அனைத்தையும் செய்யவுள்ளேன்.



நான் கட்சி மாறுவதற்கு அரசின் மீதோ அல்லது ஜனாதிபதியின் மீதோ எந்தவிதமான தனிப்பட்ட கோபதாபமும் இல்லை.

அரசின் ஏகாதிபத்திய செயற்பாடுகள் மற்றும் ராஜபக்ஷ குடும்பத்திலுள்ள சிலரது நடவடிக்கைகள் காரணமாகவும் அரசிலுள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் மீது அதிருப்தியடைந்தே உள்ளனர். விரைவில் பல உறுப்பினர்கள் அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்வர் என அவர் தெரிவித்தார். (இ-5)

## 120,000 இளையோர் அரச சேவையில்

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் இளைஞர், யுவதிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்த இளைஞர், யுவதிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் பொருட்டு 50 ஆயிரம் இளைஞர், யுவதிகள் அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.


மேலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைகளை திறன்மிக்கதாக்கும்பொருட்டு 50 ஆயிரம் இளைஞர், யுவதிகள் உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவைக்காக உள்வாங்கப்படவுள்ளனர். இது தவிர, 20 ஆயிரம் இளைஞர்கள் தொழில்நுட்ப சேவையிலும் நாட்டின் பின்தங்கிய பிரதேச அரச நிறுவனங்களிலும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 200 |
| தக்காளி | 150 | 160 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 160 | 140 | 150 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 | 50 |
| புடோல் | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 110 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 140 | 140 | 150 | 100 |
| லீக்ஸ் | 250 | 180 | 170 | 220 |
| பீற்றூட் | 100 | 120 | 130 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 340 | — | 160 |
| போஞ்சி | 120 | 180 | 170 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 70 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 | 40-45 |
| இராசவள்ளி | — | 130 | 150 | — |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 200


குணா ஜி-ஸ்ரார்




அபிசேக் உமாகாந்தன்




கஜன் வினோ





சக்தி வேல்




தாரணி பரமசிவம்




கோபல் துவா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2014-15.12.2014



## சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

**எதையும் உடனடியாக முடிக்க வேண்டுமென்று எடுத்துரைக்கும் சிம்ம இராசி நேயர்களே!**

**குருவின் அதிசாரம் வருவதால் கூடுதல் கவனம் தேவை!**

பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய மாதமாக இந்த கார்த்திகை மாதம் உங்களுக்கு அமையப் போகிறது. ராசிநாதன் சூரியன் விருச்சிகத்தில் சஞ்சரித்தாலும் உங்கள் ராசிக்கு அதிசாரமாக குரு வரப்போகிறார். ஒரு சில நாட்கள் குரு ஜென்மத்திலிருந்தாலும் சுய ஜாதகத்தில் குரு பலமிழந்து இருப்பவர்களுக்கு இப்பொழுது அதிசாரத்தில் நல்ல நேரமாக அமையும்.

2 இல் ராகு, 8இல் கேது இருப்பதால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. கன்னி-ராகு எண்ணியதை நிறைவேற்றி வைப்பதோடு எளிதில் தொழில் மூலம் லாபம் கிடைக்கவும் வைக்கலாம். குறிப்பாக மண், பூமி சம்பந்தப்பட்ட தொழில் செய்பவர்கள், ரியல் எஸ்டேட், கட்டட உபயோகப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள், கட்டடம் கட்டி விற்பனை செய்பவர்கள் ஆகியோருக்கு அதிசார குருவின் பார்வை செவ்வாயின் மீது பதியும் நேரமும், செவ்வாய் உச்சம் பெறும் நேரமும் பொன்கொழிக்கும் நேரமாக அமையும்.

உச்ச சனியின் ஆதிக்கத்தால் ஒவ்வொரு பிரச்சினையும் நல்ல முடிவிற்கு வரும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலையை உயர்த்திக் கொடுக்க முன்வருவர். கேதுவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் அருளாளர்களின் தொடர்பும் ஆன்மிக நாட்டமும் உங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொடுக்கும். கார்த்திகைத் திருநாளில் முருகப்பெருமான் ஆலயம் சென்று வழிபட்டு வருவதோடு பரணி தீபத்தன்று வயதுக்கேற்ற விளக்கேற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

# குருவின் அதிசாரம் வருவதால் கூடுதல் கவனம் தேவை

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 20ஆம் திகதியில் விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். தனலாபாதிபதி 4இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் தாராளமாக தனவரவு வந்து சேரும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். செய்தொழில் விறுவிறுப்பாக நடைபெறும். பட்டாபிஷேக ராமர் கோவில் வழிபாடும், காளிங்க நர்த்தனம் செய்த கண்ணன் வழிபாடும் திட்டமிட்ட காரியங்கள் நிறைவேற வழிவகுக்கும்.

**மகர செவ்வாயின் சஞ்சாரம்!**

நவம்பர் 22 ஆம் திகதி மகர ராசியில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். சிம்ம ராசிக்கு யோகம் தரும் கிரகம் உச்சம் பெறும் பொழுது நல்ல பலன்கள் இல்லம் தேடி வந்துகொண்டேயிருக்கும். இதுவரை வியாபாரம் தொழில் விறுவிறுப்பாக நடைபெறவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் வண்ணம் இந்த மகர செவ்வாய் மகத்தான பலன்களை வழங்கப்போகிறது. அங்காரக வழிபாடும், யோகபலம் பெற்ற நாளில் முருகப் பெருமானுக்கு சந்தனக் காப்பு அலங்காரமும் செய்து வழிபட்டால் உங்கள் சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும்.

**அதிசார குருவின் ஆதிக்கம்!**

டிசம்பர் 3ஆம் திகதி சிம்ம ராசியில் குரு அதிசாரமாக செல்கிறார். இது ஒரு சிலருக்கு வளர்ச்சியை கொடுக்கும். ஒரு சிலருக்கு தளர்ச்சியைக் கொடுக்கும். குரு உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவதால் சுய ஜாதகத்தில் குருவின் சஞ்சார பலம் எப்படி இருக்கிறதோ அதற்கு ஏற்ற விதத்தில் அதிசார காலத்தில் பலன் கிடைக்கும். பொதுவாக பயணங்கள் அதிகரிக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும்.

**புத-சுக்ர சேர்க்கை காலம்!**

டிசம்பர் 7ஆம் திகதி தனுசு ராசிக்கு சுக்ரன் செல்கிறார். அடுத்த நாளே புதனும் அவரோடு சேர்ந்து இணைகிறார். இந்த புத-சுக்ர காலம் ஒரு பொன்னான காலமாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து அனைத்துக் காரியங்களையும் முடித்துக் கொடுப்பர். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். இம்மாதம் சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்து செய்ய வேண்டிய நேரமாகும். வாக்கு ஸ்தானத்தை கேது பார்ப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். குரு ஜென்மத்திற்கு வந்த பிறகு அலைச்சல் அதிகரிக்கும். க்ணவன்-மனைவிக்குள் விரிசல் ஏற்படாதிருக்க கார்த்திகை நாளில் முருகப்பெருமானை வழிபாடு செய்வது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். தொழில்முன்னேற்றம் கருதி புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள்.

# சிவல்புரி சிங்காரம்



## கன்னி

உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

**யார் எதைச் சொன்னாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் கன்னி இராசி நேயர்களே!**

**தொட்டது துலங்கும் நேரம் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும்!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, தனவரவு தாராளமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி காண்பீர்கள். வாக்கு ஸ்தானத்தில் சனி வீற்றிருந்தாலும் அது விலகும் நேரம் என்பதால் இனி கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது.

கொள்கைப் பிடிப்போடு செயறபட்டு கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். குருவின் ஆதிக்கம் அதிசாரத்தில் இயங்கப்போவதால் வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மனக் கவலையும், பணக் கவலையும் மாறும். மந்தநிலையில் நடைபெற்ற தொழில் இனி எந்த ரூபத்திலும் வளர்ச்சியடைந்து ஆச்சரியப்பட வைக்கும். வசந்த காலத்தை வரவழைத்துக் கொடுக்கும் விதத்தில் சனிப்பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது.

ஜென்ம ராசியில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால்தான் ஏற்ற இறக்கமான வாழ்க்கை உங்களுக்கு அமைகிறது. எனவே யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. அஷ்டமாதிபதி செவ்வாய் உச்சம் பெறும் இந்த மாதத்தில், திசாபுத்தி பலம் இழந்தவர்கள் விரயங்களைச் சந்திக்க நேரிடும். அதுபோன்ற காலங்களில் அங்காரக வழிபாடும் நவக்கிரக வழிபாடும் உங்களுக்குத் தேவை. பொதுவாக திருக்கார்த்திகை அன்று கார்த்திகேயன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் நேர்த்தியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 20 ஆம் திகதி விருச்சிக ராசியில புதன் சஞ்சரிக்கப் போகிறார். புத- ஆதித்ய யோகம மற்றும் புத சுக்ர யோகம் செயறபடும் நேரமாகும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். உடன் பிறப்புகளின் உதவி கிடைக்கும். உற்ற நண்பர்களால் வரவு கூடும். கடன் சுமையிலிருந்து விடுபட்டுக் கைநிறைய லாபம் பார்ப்பீர்கள். பணியாளர்கள் முதல் பக்கத்திலிருப்பவர்கள் வரை உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். அணிகலன்கள் மற்றும் நூதனப் பொருட்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும்.

**மகர செவ்வாயின் சஞ்சாரம்!**

மகர ராசியில் நவம்பர் 22 ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 8 இற்கு அதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஒரு பக்கம் வெற்றிச் செய்திகள் வந்தாலும், மற்றொரு பக்கம் போராட்டங்கள் அதிகரிக்கும். இடம் வாங்கியதை விற்கலாமா? என்று ஒரு சிலர் யோசிப்பர். எப்படியாவது கடனை அடைத்துவிட வேண்டும் என்பதற்காக கட்டிய வீட்டைக் கொடுத்துவிட்டு, தாங்கள் வேறு வீட்டிற்குச் சென்று வசிக்கும் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வர். அதிகார வர்க்கத்தினரால் அல்லல்கள் ஏற்படும்.

**குருவின் அதிசாரப் பலன்கள்!**

டிசம்பர் 3 ஆம் திகதி சிம்ம ராசிக்கு குரு அதிசாரமாக வரப்போகிறார். 4, 7இற்கு அதிபதியான குருபகவான் 12 இல் மறைவது யோகம் தான். புதிய திருப்பங்களும், புகழ்மிக்கவர்களின் சந்திப்புகளும் கிடைக்கும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**புத-சுக்ர சேர்க்கை காலம்!**

டிசம்பர் 7 அன்று தனுசு ராசிக்கு சுக்ரன் செல்கிறார். தொடர்ந்து 8 ஆம் திகதி புதனும் அதே இடத்திற்கு செல்கிறார். சுக ஸ்தானத்தில் இரண்டும் இணைகின்ற பொழுது சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். தகராறு செய்தவர் கள் தானாக விலகுவர். ஆடை, ஆபரண சேர் க்கை அதிகரிக்கும். கடிதம் கனிந்த தகவலைக் கொண்டு வந்து சேர்க்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். தாய்வழி உறவினர்கள் உங்கள் தனவரவிற்கு உறுதுணையாக இருப்பர். இம்மாதம் பரணி தீபத்தன்று முருகப்பெருமானுக்கு விளக்கேற்றி வழிபடுவதோடு, கார்த்திகைத் திருநாளில் வள்ளி மணாளனையும் வழிபட்டு வாருங்கள். நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுக்கடுக்காக நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும். சென்ற மாதத்தில் எடுத்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். செய் தொழிலை மாற்றியமைக்க முன்வருவீர்கள். வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பிள்ளைகள் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவர். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயர, முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது.

# தொட்டது துலங்கும் நேரம் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆயிரத்து 511 மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்பட்டுள்ளது

### துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 61பாடசாலைகளில்கல்விபயிலும் 8 ஆயிரத்து 511 மாணவர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான இலவச பாடசாலை சீருடை விநியோகிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் கோட்டத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளில் கல்வி பயிலும் 2 ஆயிரத்து 143 ஆண் மாணவர்களுக்கும் 2 ஆயிரத்து 86 மாணவிகளுக்குமாக மொத்தம் 4 ஆயிரத்து 229 மாணவர்களுக்கும் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 27 பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆயிரத்து 274 ஆண் மாணவர்களுக்கும் ஆயிரத்து 293 மாணவிகளுக்குமாக மொத்தம் 2 ஆயிரத்து 567 மாணவர்களுக்கும் மற்றும் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தின் கீழுள்ள 16 பாடசாலைகளில் கல்வி பயிலும் 903 ஆண் மாணவர்களுக்கும் 812 மாணவிகளுக்குமாக மொத்தம் ஆயிரத்து 715 மாணவர்களுக்குமாக ஒட்டு மொத்தமாக 8 ஆயிரத்து 511 மாணவர்களுக்கு எதிர்வரும் கல்வி ஆண்டுக்கான பாடசாலை சீருடை விநியோகம் நடைபெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வாகனம் தடம்புரண்டது



ஏ-9 வீதி பனிக்கன்குளப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வாகனம் வீதியை விட்டு விலகியதில் தடம் புரண்டு சேதமடைந்தது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பனிக்கன் குளம் 229-230 இடைப்பட்ட மைல் கல் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில்தெரியவருவதாவது, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதில் அருகிலுள்ள வாய்க்காலினுள் தடம் புரண்டது.

இதில் வாகனம் சேதமடைந்ததுடன் பயணித்த அனைவரும் காயமின்றி உயிர்தப்பினர். (2-281)

# வவு. பிரதேசசபையின் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகளை உள்ளடக்கி இப்பாதீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை மக்கள் பார்வைக்காக கூமாங்குளம் நூலகம், ஓமந்தையில் அமைந்துள்ள பிரதேச சபையின் உப அலுவலகம் மற்றும் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே வரவு செலவுத் திட்டத்தை மக்கள் பார்வையிட்டு ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின், 7 நாட்களுக்குள் தமக்கு அறிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (2)

# வரி செலுத்துநர்களுக்கான விசேட ஏற்பாடுகள் பூர்த்தி

(கிளிநொச்சி)

2013/2014 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டுக்குரிய வரியினைச் செலுத்தி நவம்பர் மாதம் 30 ஆம் திகதி 2014 அன்றோ அதற்கு முன்னரோ வருமானவரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க வேண்டியது வரிசெலுத்துநர்களின் சட்டக் கடப்பாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வரி செலுத்துநர்களின் நன்மை கருதி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்திலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் உங்கள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்கமுடியும் என்பதுடன் விபரத்திரட்டுக்களுடன் அதனைப் பூரணப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எடுத்து வருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அத்துடன் முன்னைய வருடங்களுக்குரிய வருமானவரி விபரத்திரட்டுக்கள், தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி விபரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாது இருப்பின் அவற்றையும் சமர்ப்பித்துக் கொள்ள முடியும் என்பதுடன் புதிய வரிக் கோவைகள் திறக்க விரும்புவோர், வரி தொடர்பான விளக்கங்கள் பெற விரும்புவோரும் சமுகம் அளிக்கலாம் என்பதனை உள்நாட்டு இறை வரித்திணைக்கள யாழ். பிராந்திய அலுவலக பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி சு.சர்வேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# இலைமடிச்சுக்கட்டி நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தாவிடின் விளைச்சல் பாதிக்கும்

### முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில நாட்களாக நிலவும் மழையுடன் கூடிய மேகம் சூழ்ந்த மப்பும் மந்தாரமுமான கால நிலையின் விளைவாக நெற்செய்கையில் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் ஏற்பட்டுள்ளமையினை பரவலாக அவதானிக்க முடிவதாக முல்லை.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கரைச்சிக் குடியிருப்பு வெளிப்பகுதியிலும் குமுழமுனையில் பெரிய வெளிப் பகுதியிலும் கொக்கிளாய்ப் பிரதேசத்திலும் புதுக்குடியிருப்பில் முள்ளிவாய்க்கால் மற்றும் கைவேலிப் பகுதிகளிலும் உடையார்கட்டு தெற்கு, கிழக்கிலும் ஒட்டுசுட்டான், புளியம்குளம், தண்டுவானிலும் முத்தையன்கட்டுப் பிரதேசத்திலும் பாண்டியன்குளம் மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையில் இலைமடிச்சுக் கட்டியின் தாக்கம் தீவிரமடைந்துள்ளதாக பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இலைமடிச்சுக்கட்டி புழுக்கள் நெற்பயிரின் இலையைச் சுருட்டி அல்லது மடித்து உட்புறமிருந்து உள்இழையங்களை சுரண்டி உணவாக்குவதால் இலைகளில் முதலில் நீள்பக்கமாக வெண்ணிற அடையாளங்கள் தோன்றும். தாக்கம் அதிகரிக்கும் நிலையில் இலைகள் உலர்ந்து போகும். உக்கிரமான தாக்கம் ஏற்படும் போது கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து விளைச்சல் முற்றாகப் பாதிக்கப்படும்.

இதனை முகாமைத்துவம் செய்வதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் விவசாயத்திணைக்களத்தால் பரிந்துரை செய்யப்படுகின்றன. அதற்கமைவாக,

- அதிக நிழலை ஏற்படுத்தும் மரங்கள்/கிளைகளை வயலில் இருந்து அகற்றுதல்.
- மேலதிக நைதரசன் பசளை(யூரியா) பாவனையை தவிர்த்தல்.
- இலை மடிச்சுக்கட்டிப் புழுக்களை பறவைகள் உணவாக்கும். ஆதலால் வயல் வெளிகளில் ஆங்காங்கே பறவை தாங்கிகளை நாட்டுதல்
- தாக்கம் தீவிரமாகும் நிலையில் விவசாயத்திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்படும் கீழ்க்காணும் விவசாய இரசாயனங்களை முறைபபடி விசிறுதல்.

| இரசாயனப்பெயர் | | வர்த்தகப் பெயர்கள் |
|---|---|---|
| 1)அசிபேற் | - | அசிபேற் |
| 2)குளோர்புளுவசியுறோன் | - | அற்றப்புறோன் |
| 3)தயோசைக்ளெய்ம் | - | எவிசெக்ற |
| 4)பிப்றொனில் | - | றீஜென்ற் |
| 5)ரெபியுபெனோசயிட் | - | மிமிக் |
| 6)குளோரன்ரனி லிபியுறோல்+ தயமெதொக்சாம் | - | வேர்டகோ |

மேற்படி விவசாய இரசாயனங்களை சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளில விசிறும் போதே கட்டுப்பாடு வினைத்திறன் மிக்கதாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். விவசாய இரசாயனங்களை விசிறு வதாயின் பறவை தாங்கிகளை அகற்றுதல் வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(2)

# மாட்டுடன் மோதி இளைஞன் பலி!

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மாட்டுடன் மோதி விழுந்ததில் உயிரிழந்தான். இவ்விபத்து சம்பவம் நேற்று வவுனியா-மன்னார் வீதியில் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் வீதியில் நின்ற மாடு ஒன்றுடன் மோதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதோடு இது குறித்த மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கான ஊர்வலம் இன்று

எயிட் அக்ஷன் (AID ACTION) நிறுவனத்தின் திட்டமான I LEAD தொழிற்பயிற்சி கல்லூரியின் ஏற்பாட்டில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கான ஊர்வலம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு குறித்த தொழிற்பயிற்சி கல்லூரியின் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

இந்த ஊர்வலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலை முன்பாகவிருந்து ஆரம்பித்து ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி மக்கள் வங்கி கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள கலையரங்கில் முடிவடையும்.

இதனைத் தொடர்ந்து கலையரங்கில் பாடசாலை மாவணவர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளும் மதகுருமார்களின் உரைகளும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




### துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில்

# புலமைப்பரிசில் பரீட்சையில் 44 மாணவர்கள் சித்தி

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி தற்போது பெறுபேற்றின் உச்சப் புள்ளியானது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 157 இலிருந்து 149 ஆக குறைக்கப்பட்டதனால் மேலும் 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் ஒட்டுசுட்டான் கல்வி கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளான மு/சண்முகரட்ணம் வித்தியாலயத்தில்- அ.கஜானி-150, ச.டிலக்ஷன்-153, மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை-அ.துலக்சன்-153, மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்- ர.நந்தீசன்-156, மு/ஆறுமுகம் வித்தியாலயம்-சா.சுஞ்ஜீவன்-156, த.யதுசிகா-150 ஆகியோரும்,

துணுக்காய் கல்வி கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளான மு/மயில் வாகனம் ஆரம்ப வித்தியாலயம்- ச.தேனுஜா-149, மு/அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்- ர.கஜ துர்க்கா-156, ர.ஜானுசா-155, த.எயூஜி-152, மு/திருநகர் அ.த.க. பாடசாலை- ஸ்ரீ.சுஜீவன்-154 ஆகியோரும்,

மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளான மு/விநாயகபுரம் அ.த.க.பாடசாலை- அ.வேணுஜன்-154, மு/கொல்லவிளான் குளம் அ.த.க பாடசாலை- கோ.பானுசா-151, மு/குமாரசாமி ஆரம்ப வித்தியாலயம்- ர.ஜெயரூபன்-149 ஆகிய 14 மாணவர்கள் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 30 மாணவர்கள் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)



கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையொட்டி கடந்த 18 ஆம் திகதி காலை 8 மணியளவில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் மரநடுகை நிகழ்ச்சி இடம் பெற்ற[illegible] படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பத்து பாடசாலைகளில் நாவலர் சிலைகள் அமைக்கப்படவுள்ளன


(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசம் எங்கும் உள்ள முன்னணித் தமிழ்ப் பாடசாலைகள் தோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலைகளை நிறுவதன் மூலம் நாவலர் பெருமானின் சிறப்பை மாணவர்கள் மத்தியில் நிலைநாட்ட நடவடிக்கை எடுத்து வரும் நாவலர் நற்பணி மன்றம், அடுத்து வரும் வாரங்களில் யாழ்ப்பாணத்திலும் பத்துப் பாடசாலைகளில் நாவலர் சிலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ். சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, காரைநகர் தியாகராஜா இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவை உட்பட பத்துப் பாடசாலைகளிலேயே அடுத்த கட்டமாக நாவலர் சிலைகள் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றன.

கொழும்பிலும், மலையகத்திலும் மாத்தளை, நாவலப்பிட்டி, கொட்டகலை போன்ற இடங்களிலும் அண்மையில் பல நாவலர் சிலைகள் இந்த அமைப்பினரால் நிறுவப்பட்டன.

நாவலர் நற்பணி மன்றம் அதன் ஸ்தாபகத் தலைவர் கருணை ஆனந்தனின் வழிகாட்டலில் தமிழ்ப் பாடசாலைகள் தோறும் நாவலர் சிலையை நிறுவும் பணியை முன்னெடுத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



நன்றி: அததெரண

## ஒருங்கிணைப்புக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. எனினும் இவ் வருடத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் அன்றையதினம் காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

## புதிய தலைவரின் பதவியேற்பு இன்று

திசைகாட்டி குழுமத்தின் புதிய தலைவராக எஸ்.சுபசீலன் பதவி ஏற்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள திசைகாட்டி தலைமைப் பணிமனையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் கனடா ரொறன்ரோ ஒன்ராரியோ மீகாமன் தனியார் நிறுவன நிர்வாக இயங்குநர் திருமதி எஸ்.சுகந்தி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

எனவே அனைவரும் கலந்து கொள்ளுமாறு திசைகாட்டி குழு பிரதம நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

# அவலநிலை என்று மாறுமோ?





யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக அனைத்துப் பிரதேசங்களிலும் வெள்ளநீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

இதில் கொழும்புத்துறை (74 இலக்க) நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதியில் வெள்ளநீர் நிரம்பி காணப்படுகின்றது. இரவு, பகல் என தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் அங்குள்ள வெள்ளம் ஓடாது காணப்படுகின்றது. இதனால் அவ் வீதியூடாக பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள்தினமும்வெள்ளநீரின்மத்தியில் பாடசாலை சென்று வருகின்றனர்.

இதனால் அம்மாணவர்களது சீருடை, காலணி என்பன பாதிக்கப்படுகின்றன.

மழை பெய்து சற்று நேரத்தில் வெள்ளம் வற்றிப் போகின்ற நிலையில் இவ் வீதியில் மட்டும் வெள்ளநீர் வற்றிப் போகாது நிரம்பி காணப்படுகின்றது. பாடசாலை செல்லும் மாணவர்களில்சில மாணவர்கள் தாம் பாடசாலை செல்ல முடியாது என பெற்றோர்களிடம் கூறுகின்றனர்.

இந்நிலையிலும் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்களில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்றாலும் அவர்களை உட்கார வைத்து உருட்டிச் செல்கி ன்ற காட்சிகளை காணக் கூடியவாறு உள்ளது.

இவ்வாறு இவ்வீதியில் தொடர்ச்சியாக வெள்ளநீர் நிற்பதால் பல சிரமங்களை தாம் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைஉருவாகும்எனஅங்குள்ள மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வெள்ளநீர் நிரம்பிக் காணப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் மழை பெய்தால் வெள்ளம் இன்னும் அதிகரித்து தமது வீடுகளுக்குள் வெள்ளநீர் வந்து விடுமென அங்குள்ள மக்கள் அச்சப்படுகின்றா ர்கள்.

மேலும் தமது கிணறுகள், மலசல கூடங்கள் வெள்ளநீரால் நிரம்பி விடும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதைவிட வீதியில் வெள்ளநீர் நிரம்பிக் காணப்பட்டால் டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதாக அங்குள்ள மக்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

டெங்கு போன்ற நோய்த் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வீடுகள், சூழல்கள் என்பவற்றை சுகாதார முறைப்படி வைத்துள்ள போதும் இவ்வாறான இயற்கை அனர்த்தத்தினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என அங்குள்ள பொது மக்களினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அத்துடன்தமதுகோரிக்கையினை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தமது பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியினைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை மாணவர்களது பெற்றோரினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7)

## கணிதபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் .கைதடி விநாயகர் சனசமூக நூல் நிலையத்தின் ஏற்பாட்டில் கைதடி, நாவற்குழி, மட்டுவில் போன்ற பிரதேசங்களில் இருந்து இவ்வருடம் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ளமாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் யாழ்.மாவட்டத்தின் பிரபல ஆசிரியர்களால் கணித பாடத்துக்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்குறித்த பிரதேசங்களில் உள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு கருத்தரங்கில் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (இ-7)




## வங்கிக் கிளை திங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளையின் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் தலைவி டப்.ஏ. நாளனி கலந்து கொள்வதுடன் கௌரவிருந்தின ராக தேசிய சேமிப்பு வங்கியின் பணியா ற்றுப் பணிப்பாளர் சுமனதாச அபே குண வர்த்தன கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

# நிதிமோசடி விசாரணைக்குழுவை விரைவாக அமைப்பது அவசியம்

## பருத்தித்துறை பிரதேசசபை முதலமைச்சரிடம் கோரிக்கை

வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு முதல மைச்சரால் அமைக்கப்படவுள்ள விசாரணைக்குழுவை விரைவாக அமைத்து நிதிமோசடியில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவேண்டும் என்ற கோரிக்கையினை முன்னிறுத்தி பருத்தித்துறை பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் விசேட தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் பி.சஞ்சீவன விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் புறநெகும (நெல் சிப்) திட்டத்தில் கிடைக்கப்பெற்ற நிதியில் மானாண்டி சந்தை நிர்மாண வேலையில் நிதி மோசடி இடம்பெற்றதாக பிரதேச சபைக்கு தகவலளிக்கப்பட்டது.

இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர், உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கு தகவல் முன்னளிக்கப்பட்டது.

இவ்வாறு தகவலளிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும் இது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. காலதாமதமான விசார்ணை மேற்கொள்வதனால் நிதி மோசடியில் ஈடுபட்டவர்கள் தாங்கள் தப்பித்துக்கொள்ள தங்களுக்கு சாதகமான வழி நிலைகளை ஏற்படுத்துவதோடு ஆவன சீராக்கமும் மேற்கொள்ளலாம்.

அத்துடன் தங்கள் பெயரிலுள்ள சொத்துக்கள் மற்றும் பணத்திற்கு சமமான உடைமைகள் உடைமை மாற்றம் செய்வதற்கு வழி வகுக்கும். புறநெகும நிதி மோசடியினை விசாரணை செய்ய விசாரணைக்குழு ஏற்படுத்திக் கொண்டதாக அறிவிக்கப்பட்டும் இதுவரையில் எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுத்தார்கள் என தெரியவிலலை.

அண்மைய ஊடக செய்திகளின பிரகாரம் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் குறித்த இத்திட்டத்தில் அதிகளவான மோசடியினை ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டதாக அறியமுடிகின்றது.

எனவே உள்ளூராட்சி மன்ற ங்களினை வலுப்படுத்துவதற்கு கிடைத்த இந்நிதியில் ஏற்பட்ட மோசடியில் ஈடுபட்டவர்களை இடைநிறுத்தி உரிய விசாரணை செய்வதுடன் பொதுமக்களின் தேவைக்கு பூரணப் படுத்தாமல் வீணடிக்கப்பட்ட நிதியினை மீளப்பெறுவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்குமாக வடக்கு ஆளுநரின், பணிப்பிற்கு அமைய முதலமைச் சரினால்அமைக கப்படவுள்ள ஆணைக்குழுவினை விரைவாக செயற்படுத்துமாறு முதலமைச்சரை கோருவது என சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ)

## முத்துத்தம்பி வித்தியாலய பரிசளிப்பும் நூல் வெளியீடும்

யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய பரிசளிப்பு பிழாவும் சங்கமம் நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப் பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி மற்றும் கௌரவ விருந்தினராக புதிய உயர்கலைக்கல்லூரி நிர்வாகி திருமதி அருள் நங்கை சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனால் போகட்டும் போடா இந்தப் பூமியில்
நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?
-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்தவின் குடும்ப ஆட்சியில் இருந்து வெளியேறிய ஒரு விபூசணன்

நடக்கும் என்பார் நடக்காது; நடக்காது என்பார் நடந்துவிடும் என்பது சினிமாப் பாடல். அரசியலில் அந்தப் பாடலின் யதார்த்தம் பளிச்சிடும். அந்தள விற்கு அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது நிலைமையாயிற்று.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்டுள்ளார். எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவராக இருப்பார் என்று நாமும் நாட்டின் ஜனாதிபதியும் நினைத்திருந்தபோது, ஜனாதிபதி மகிந்தவின் அரசில் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரபால சிறிசேனவை பொதுவேட்பாளராக எதிர்க் கட்சிகள் அறிவித்திருப்பது இந்த ஆண்டு நம் நாட்டு அரசியலில் நடந்த மிக உன்மையான அதிர்ச்சிச் செய்தி எனலாம்.

எவருமே எதிர்பார்க்காத வகையில் மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதென்று எதிர்க் கட்சிகள் அறிவித்திருப்பதானது, அரசியலில் ஆர்வம் குன்றிக் கிடந்த சாதாரண மக்களையும் துள்ளி எழும்ப வைத்துள்ளது.

அந்த வகையில் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தல் சூடுகிளப்பும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

அதேநேரம் தேர்தல் வெற்றிக்காக எதுவும் நடக்கும் என்று எதிர்வு கூறுவதிலும் தயக்கம் தேவையில்லை. எதுவாயினும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார் என்பதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள், எதிர்பார்ப்புகள் கடந்து; ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிடக் கூடிய வேட்பாளரை தெரிவு செய்தமை எதிர்க் கட்சிகளிடையே இருக்கக் கூடிய வலுவான ஒற்றுமையைக் காட்டுகிறது.

ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரது சகோதரி சுனேத்திரா, சஜித் பிரேமதாச, கருஜெயசூரிய போன்றவர்களில் ஒருவரே பொது வேட்பாளராக வரக் கூடிய வாய்ப்பு உண்டு என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டு அந்தச் செய்தி ஊடகங்களிலும் இடம்பிடித்துக் கொண்டது.

இவை எல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நியமிப்பது என்ற தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் எடுத்திருந்தன.

எனினும் பரம இரகசியமாக அச் செய்தி பாதுகாக்கப்பட்டதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது குழுமத்தையும் திசை திருப்பும் வகையில், பொது வேட்பாளர் குறித்து வெவ்வேறு பெயர்கள் முன்மொழியப்பட்டு அவை பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

இதன் காரணமாக மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக வருவார் என்று ஆளும் தரப்பு கனவும் கண்டில. நிலைமை இவ்வாறு இருக்க, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஆளும் கட்சிக்குள் இருந்தமை மகா அதிசயமே.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகராக அவரது சகோதரர் சமல் ராஜபக்ஷ. அடுத்த சகோதரர் பஷில் ராஜபக்ஷ பொருளாதார அமைச்சர். தம்பி கோத்தபாய பாதுகாப்புச் செயலாளர். மகன் நாமல் பாராளுமன்ற உறுப்பினர் என ஒரு பெரும் குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட மகிந்தவின் ஆட்சியில் ஒரு விபூசணன் இருந்தமை அதிசயத்திலும் அதிசயம்.

வேட்பாளர் தெரிவில் வெற்றி பெற்ற எதிர்க் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுமா? தோல்வி காணுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ஐயப்ப யாத்திரிகர்களுக்கான விசா நடைமுறைகள் அறிவிப்பு

இவ்வாண்டு கேரளாவிலுள்ள சபரி மலைஆலயத்திற்குவிரதம்மேற்கொண்டு இலங்கையிலிருந்து செல்கின்ற ஐயப்ப பக்தர்களுக்காக அனுசரணை வழங்கும் நோக்குடன் அண்மையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் ஐயப்ப குருசுவாமிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

ஐயப்ப பக்தர்கள் தமது குரு சுவாமி மூலமாக ஒரு குழுவாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது இந்திய தூதரகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதனை நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கு ஐயப்ப பக்தர்கள் தமது குரு சுவாமியூடாக விண்ணப்பங்களை திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு தொகுதி விண்ணப்பத்தில் 25 ஐயப்ப பக்தர்களின் விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும். பக்தர்களின் முழுப்பெயர், முகவரி அடையாள அட்டை இலக்கம், கடவுச் சீட்டு இலக்கம் கையொப்பம் என்பன வரிசைக்கிரமமாக அமைந் திருக்க வேண்டும் மேற்குறித்த முழு மையான விபரங்களை குழுவிற்குப் பொறுப்பான குருசுவாமி தனது பதவி முத்திரையோடு சான்றுப்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்ட ஐயப்ப பக்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய மாவட்ட செயலகம் ஊடாக திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவர்களுக்குரிய குழு விசாவிற்கான சிபாரிசு யாழ்ப்பாண இந்திய தூதுவராலயத்திற்கு வழங்கப்படும்.

அவ்வாறேகண்டி,மாத்தளை, பதுளை, நுவரெலியா, மொனராகலை ஆகிய ஐந்து மாவட்ட ஐயப்ப பக்தர்கள் தத்தமது மாவட்ட செயலகங்களுக்கு குரு சுவாமியூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்தி திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். திணைக்கள பணிப்பாளர் இதனை கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவராலயத்திற்கு சிபாரிசு செய்வார்.

மேற்குறித்த பத்து மாவட்டங்களையும் தவிர்த்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் கொழும்பிலுள்ள இந்துசமய திணைக்களத்தினூடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இந்நடைமுறை மூலம் அனைத்து ஐயப்ப பக்தர்களும் கொழும்புக்கு வந்து இந்திய தூதுவராலயத்தில் விசா பெறுவதற்கான சிரமங்கள் தவிர்க்கப்படுகின்றன. பக்தர்கள் தமக்கு அருகிலுள்ள இந்திய தூதுவராலயத்தினூடாகவே விசா பெற்றுக் கொள்வதற்கு இந்நடைமுறை உதவியாக இருக்குமென திணைக்களம் தெரிவிக்கின்றது.

மேலும் குழுவிசா பெறுவது தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் 011 255 2641 அல்லது 011 2505403 என்ற இலக்கங்களைத் தொடர்பு கொண்டு திணைக்கள பிரதிப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அல்லது பிரதான முகாமைத்துவ உதவியாளர் ப.வசந்தகுமார் ஆகியோருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாமென திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## சிவவேள்வி

உலக அமைதி வேண்டியும், தமிழ் மக்களுக்கு நிரந்த தீர்வு வேண்டியும் நடத்தப்படவுள்ள 4ஆவது வருட சிவ வேள்விப் பெருவிழாவும் திருமுறைப் பெருவிழாவும் இன்று சனிக்கிழமை அதிகாலை 5.55 மணிக்கு சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவிலில் ஆலய பிரதம குருவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-5)

## இரத யாத்திரை

ஸ்ரீ ஜெகந்நாதரின் இரத யாத்திரை விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. இவ் இரத பவனியானது யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேஷ்வரர் பெருமாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, நல்லூர் பருத்தித்துறை வீதி ஊடாக கோவில் வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## குழு மோதலில் ஒருவருக்கு காயம்

விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஏற்பட்ட குழுமோதலில் பார்வையாளர் ஒருவர் மோசமாக தாக்கப்பட்டு தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இமையாணன்புறாப்பொறுக்கி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் போதே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி உதைபந்தாட்ட அணிகளான உடுப்பிட்டி நவஜீவன், வதிரி டயமன்ஸ் அணிகள் மோதியுள்ளன. இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணி வெற்றியீட்டியதைத் தொடர்ந்து இரு விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் திடீர் குழு மோதல் ஏற்பட்டது.

இதன்போதே குழுமோதலை தடுக்கச் சென்ற வதிரி டயமன்ஸ் அணியினரைச் சேர்ந்த குறித்த பார்வையாளர் மீது கடும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த பார்வையாளர் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார் எனத் தெரிய வருகிறது. (இ-60)

## ஞானக்குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வு

யாழ்.ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆதரவுடனும் பாலர் கல்விக் கழக நிர்வாகத்துடன் இயங்கும் ஞானக்குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதனும் சிறப்பு விருந்தினர்களாக பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் எஸ்.பி. காசிநாதன், யாழ். மாநகரசபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவம், எரிக்கணேஷ்பல் மூக்குக் கண்ணாடியக முகாமையாளர் திருமதி சி.கணேசலிங்கம், ஜே/88 புதிய சோனகதெரு கிராம அலுவலர் த.சல்பீர், ஜே/88 பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உத்தியோக த்தர் செல்வி .சு.மதிவதனா, ஜே/88 சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.யோ.நிரஞ்சீவ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். வரவேற்புரையை முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி லிங்கேஸ்வரன் உஷா தேவியும் ஆற்றவுள்ளனர். (இ-4)

## நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு


பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் இலங்கை போக்குவத்துச் சபை வட பிராந்தியத்திற்கான புதிய சாரதி காப்பாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று 22 ஆம் திகதி மாலை 4 மணியளவில் இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்.சாலையில் நடைபெறவுள்ளது என இ.போ.ச. யாழ்.சாலையின் பிரதி முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது"

*-வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



பெற்றோருக்கான செய்தி

ஆகையால் மிகச் சுலபமான இரகசியம் என்னவெனில் 6 வயது வரை அவனை ஓர் ராஜா போல் நடத்துங்கள். இதைத் தான் பஞ்சதந்திரங்கள் கூறுகின்றன. இதை நாங்கள் சோதித்துப் பார்த்தும் விட்டோம். (ஜீவாஸ்ரமத்தில்) 6-14 வயது வரை ஒரு ராஜகுமாரனைப்போலும் 14 வயதுக்கு மேல் ஒரு நண்பனைப்போலும் ஒரு குழந்தையை நடத்த வேண்டும். அவன் உங்களை விட சிறியதாக இருப்பதால் அவனை உங்களை விட கீழ்த்தரமாக நினைத்து நடத்தக்கூடாது. ராஜா என்பதன் பொருள் நீங்கள் அவன் ஆட்டுவிக்கும்படியெல்லாம் ஆடவேண்டும். இதை உங்களால் செய்ய முடியுமா? எந்தவிதமான மனோதத்துவமும் இங்குதேவையில்லை. இதுதான் மனோதத்துவம். ஒரு ராஜாவிடம் எவ்வாறு நாம் நடந்து கொள்வோமோ அதேபோல் நடந்து கொள்ளவேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பரந்த மனம் வேண்டும்



❖ எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும் உனக்குள்ளேயே நிறைந்து இருக்கிறது.

❖ ஒவ்வொரு மனிதனும் தனக்கென தனி இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

❖ தன்னை நெறிப்படுத்தி வாழ்பவனே, உலகத்தையும் சரியான பாதையில் செலுத்தும் தகுதி படைத்தவனாகிறான்.

❖ பரந்த இந்த உலகம் போல எப்போதும் உன் மனதையும் விரிவுபடுத்திக் கொள்.

❖ மனிதன் எப்போதும் தாழ்ந்த உண்மையில் இருந்தே, மேலான உண்மைக்கு பயணம் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ண காற்பந்தாட்ட போட்டி



நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மைலோ கிணண காற்பந்தாட்டப் போடடிகள் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெற்ற போட்டிகளின் படி திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் போட்டி நேரத்தில் இரு அணிகளும் கோல்களெதனையும் பெறவில்லை.

சமநிலை உடைப்பு தண்ட உதை நடப்பட்ட போது இதனை சாதகமாக்கிய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:3 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சக்கோட்டை சென் .சேவியர் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் 5:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இடம்பெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும் விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டியை ஆரம்பம் முதலே கட்டுக்குள் வைத்திருந்த விண்மீன் விளையாட்டுக் கழகம் 1:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

• இரண்டாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டியை ஆரம்பம் முதலே கட்டுக்குள் வைத்திருந்த உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டது. பதிலுக்கு கொலின்ஸ் வளையாட்டுக்கழகம்கோலொன்றினைப் போட்டாலும் போடடியில் 3:1 என்னும் கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகமும் மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் 2:0 என்னும் கோல் கணக்கில் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நான்காவது காலிறுதியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் போட்டி நேரத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலகளைப் பெற்றிருந்தன.

சமநிலை உடைப்பு தண்ட உதை நடப்பட்ட போது அதிலும் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றன.

மேலுமொரு உதை வழங்கப்பட போது இதனை சாதகமாக்கிய கலைமதி விளையாட்டுக் கழகம் 4:3 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இடம்பெற்ற போட்டிகளின படி முதல் அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி நேரத்தில் இரு அணிகளும் தலா ஒவ் வொரு கோல்களைப் பெற்றிருந்தன.

இதனால் சமநிலை உடைப்பு தண்ட உதை நாடப்பட்ட போது அதனை சாதமாக பயன்படுத்திய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:3 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் ஆரம்பம் முதலே போட்டியை கட்டுக்குள் வைத்திருந்த நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் 3:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட மட்ட மைலோ கிண்ண போட்டிக்கு தகுதி பெற்றது. (க-23)

# ஹொங்கொங் ஓபன் பட்மிண்டன் காலிறுதியில் சாய்னா நேவால்




பட்மிண்டன்போட்டி சாய்னா நேவால் காலிறுதிக்கு முன்னேறினார் ஹொங்கொங் ஓபன் சர்வதேச பட்மிண்டன் போட்டி ஹொங்ஹொங்கில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், சீனதைபே வீராங்கனை தாய் டிசு யிங்கை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சாய்னா நேவால் 21-17, 20-22, 21-14 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கால இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் உலக போட்டியில் இரண்டு வெண்கலப்பதக்கம் வென்ற பி.வி.சிந்து 17-21, 21-13, 11-21 என்ற செட் கணக்கில் தன்னை விட தர வரிசையில் குறைவாக இருக்கும் ஜப்பான் வீராங்கனை நோசோமி ஒகுஹராவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார்.

சீன ஓபன் பட்டத்தை கைப்பற்றிய இந்திய வீராங்கனை சாய்னா பெண்கள் ஒற்றையர் பிரிவில் 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு முன்னேறினார். இந்தியாவின் ஜுவாலா கட்டா- அஸ்வினி பொன்னப்பா ஜோடி இரட்டையர் பிரிவில் ஒரு இடம் முன்னேறி 19 ஆவது இடத்தை பிடித்துள்ளது. (க)

# அனுஷ்காவை காதலிக்கிறேன் வாய் திறந்தார் கோலி



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கோலி, நடிகை அனுஷ்காவை காதலிப்பதாக தெரிவித்துள்ளார்.

கோலியும், அனுஷ்காவும் பல இடங்களுக்கு ஒன்றாக சுற்றிவருகின்றனர். இதனால் இவர்களுக்கு இடையில் காதல் மலர்ந்ததாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

கோலியாவது அனுஷகா பற்றி ஏதாவது அவ்வப்போது தெரிவிப்பார். ஆனால் அனுஷ்கா இந்த விடயத்தை பற்றி வாய் திறந்ததே இல்லை.

இந்நிலையில் மும்பையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கிரிக்கெட் வீரர் விராட் கோலி கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், நானும் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலிக்கிறோம். தெரிந்து கொண்டே அதை பற்றி கேட்டால் என்ன அர்த்தம்.

நானும் அனுஷ்காவும் எதையும் மறைக்கவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் ஒரே விடயம் பற்றி கேட்டால், விவாதித்தால் அது சரியில்லை. இரண்டு பேரை சில இடங்களில் ஜோடியாக பார்த்துவிட்டு அதன் பிறகும் இது உறுதியா என்று கேட்கிறார்கள்?

தெரிந்து கொண்டே அது பற்றி எதற்காக கேள்வி கேட்க வேண்டும். நாங்கள் எதுவும் தவறான விடயத்தை செய்யவில்லையே. இது பற்றி நாங்கள் பேச விரும்பவில்லை.

இது எங்களின் தனிப்பட்ட விடயம். அதை மீடியா உட்பட அனைவரும் மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

# ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்து விநாயகர், யங்ஹென்றீஸ் வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுனர் வெற்றிக்கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளன.

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகள் இப் போட்டிகளில் கலந்துகொள்கின்றன.

இடம்பெற்ற போட்டிகளின படி.

அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் 1:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் போட்டி நேரத்தில் இரு அணிகளும் கோல்களெதனையும் பெறவில்லை.

சமநிலை உடைப்பு தண்ட உதை வழங்கப்பட்ட போது அதனை தமக்கு சாதகமாக்கிய இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் 3:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றிற்கு முன்னேறினர். (க-23)

# சானியாவின் அடுத்த இலக்கு



மும்பையில் தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்திய முன்னணி டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா அளித்த ஒரு பேட்டியில், சமீபத்தில் உலக பெண்கள் சாம்பியன் ஷிப் பட்டத்தை வென்றேன்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்று கலப்பு இரட்டையர் பட்டத்தை கைப்பற்றி இருக்கிறேன். கிராண்ட்ஸ்லாமில் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வெல்வதே எனது அடுத்த இலக்கு. டெனிசை விட்டு விலகும் முன்பு அந்த இலக்கை அடைந்து விடுவேன் என்று நம்புகிறேன் என்றார்.

28 வயதான சானியா மிர்சா அடுத்த ஆண்டில் சீனதைபே வீராங்கனை சு-வெய் ஹெசியுடன் இணைந்து இரட்டையர பிரிவில் விளையாட இருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications are invited by me up to 17.10.2014 from suitably qualified persons for thefollowing posts.

**01. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**
Should possess a Bachelor of Law Degree from a recognized University/HEI or Attorney -at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale**:U-EX 1(II) - Rs. 26,020–3x585–27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** :By Structured Interview.

**02. WORKSHOP ENGINEER GRADE III (University of Jaffna - Kilinochchi Premises)**

**Qualifications:**
a)Should possess a B.Sc. Engineering Degree specializing in Mechanical/ Production Engineering from a recognized University/ HEI.

OR

b)Should possess a National Diploma in Technology specializing in Mechanical/ Production Engineering or equivalent qualification, with at least seven (07) years of experience in Mechanical work shop of a recognized establishment.

**NOTE:**The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale**:U-EX 1(II) - Rs. 26,020–3x585–27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** :By Structured Interview.

**03. UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Vavuniya Campus/University of Jaffna – Kilinochchi Premises)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**
Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner

**NOTE**:One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**:U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/ - p.m.

**Selection** :By Interview.

**04. CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420; 12X645 -36,160/- p.m.

**Selection** : By Interview.

**05. MARSHAL GRADE II (University of Jaffna)**

**Qualifications:**
i. A Graduate from a recognized University
ii. Physique: Height : 5' 5" Chest: 32" deflated

**Note**:- Preference will be given to those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale** :U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.

**Selection** :By Interview.

**06. SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**
a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience that may be obtained while following the NCT course;

OR

b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment

**Salary Scale**:U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m

**Selection** :By Interview

**07. PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** :U-MT 1 (III A) - Rs. 16,535–7x155; 10x185-19,470 p.m.

**Selection** :By Interview

**08. PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**
a)Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

OR

b)Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** :U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.

**Selection** :By Aptitude Test and Interview

**09. NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**
(i)GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

AND

(ii)Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** :By Aptitude Test and Interview

**10. RECORD KEEPER GRADE II (University of Jaffna)**

**Qualifications :**
i. Should have passed the G.C.E. (Ordinary Level) Examination in six subjects with 5 credits at not more than two sittings;

AND

ii. One year of experience in keeping records in a Record Room in the University System or Government Department/ State Corporation/ Recognized Institution.

iii. Good knowledge of Computer Literacy and Binding work.

**NOTE:** Preference will be given to those who have passed the GCE(A/L) examination in 03 subjects and have obtained the certificate issued by the Department of National Archives on completion of a 05 days course conducted for Record keeping.

**Salary Scale** : U-MN1 (IIIA) - Rs.16,070-17x155-18,705 p.m.

**Selection** : By Trade Test and Interview

**11. BOOK BINDER GRADE II (University of Jaffna)**

**Qualifications:**
Should have passed the 8th Standard and have at least 5 years' experience as a Book Binder in a recognized Institution;

**Salary Scale**:U-PL 3(III) Rs.15, 650 – 16x140 -17890.p.m

**Selection** : By trade test and interview

**12. MASON GRADE II (University of Jaffna)**

**Qualifications:**
i. Pass in the 8th standard
ii. Should be conversant with
a. Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;
b. All types of plaster, mixing and laying of reinforced corcerted;
c. Reading plans and setting out foundations for simple constructions;
d. Colour washing including use of emulsion paint.
iii. Not less than 2 years' experience in masonry

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By trade test and interview

**13. MECHANIC GRADE II (University of Jaffna/ University of Jaffna - Kilinochchi Premises)**

**Qualifications:**
i. Pass in the 8th standard
ii. Should be conversant with
a. Reading scales, micrometers and recording fractional dimensions;
b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;
and
c. Reading and understanding drawings,
iii. Not less than 2 years' experience as a mechanic or machine Operator.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By Trade test and interview

**AGE LIMIT :Not more than 45 years for the above all posts.**

***Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment. 4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
**19/09/2014**

(C 9149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சி தாவக்...

7. நிரஞ்சன் விக்கிரமசிங்க

**அம்பாறை மாவட்டம்**

8.பைசல் காசிம்

9.எம்.எச்.எம்.ஹரீஸ்

**பதுளை மாவட்டம்**

10. ரோஹண புஷ்பகுமார

**காலி மாவட்டம்**

11. பியசேன கமகே

12. ரமேஷ் பத்திரன (முன்னாள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவின் புதல்வர்)

13. குணரத்தின வீரக்கோன்

**கம்பஹா மாவட்டம்**

14. சரத் குமார குணரத்ன

15. அத்துரலியே ரத்ன தேரர் (ஏற்கெனவே கட்சி தாவி விட்டார்)

16. வசந்த சேனநாயக்க (ஏற்கெனவே கட்சி தாவி விட்டார்)

**களுத்துறை மாவட்டம்**

17. ரெஜினோல்ட் குரே

18. ராஜித சேனாரத்தின

19. விதுர விக்கிரமநாயக்க

20. ரத்னசிறி விக்கிரமநாயக்க

**கண்டி மாவட்டம்**

21. ரவூப் ஹக்கீம் (பேச்சு நடக்கிறது)

**மொனராகலை மாவட்டம்**

22. சுமேதா ஜயசேன

**மாத்தளை மாவட்டம்**

23. ஜனக பண்டார தென்னகோன்

**நுவரெலியா மாவட்டம்**

24. நவீன் திசாநாயக்க

25. சீ.பி.ரத்நாயக்க

**இரத்தினபுரி மாவட்டம்**

26. சனீ ரோஹண வன்னி

27. ரிசாத் பதியுதீன்

**கொழும்பு மாவட்டம்**

28. பாட்டலி சம்பிக்க ரணவக்க (ஏற்கெனவே கட்சி தாவிவிட்டார்)

**தேசியப்பட்டியல்**

29. ஹசன் அலி

30. எம்.எஸ்.எம். அஸ்லம்

31. அசல சுரங்க ஜகொட

32. ரஜீவ விஜேசிங்க

மேற்குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவும் தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாகவும் இன்னும் சிலர் மதில்மேல் பூனைகளாக இருந்து கொண்டிருப்பதாகவும் குறித்த தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

## புதிய ஆட்சி...

இழந்த சகலவற்றையும் அவருக்கு வழங்கும் என் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கரு ஜயசூரிய ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின் புதிய ஜனாதிபதி பதவியேற்றதும் புதிய நாடாளு மன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இணைந்து கொள்ளும் கட்சிகளுக்கு பகிரப்படும் அமைச்சு பதவிகள், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை தொடர்பிலும் கலந்துரையாடலில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மெகா அமைச்சரவைக்கு பதிலாக சிறிய அமைச்சரவையை நியமிப்பது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவியை பெயரளவிலான பதவியாக மாற்றிய பின் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கும் அரசியலமைப்புத் திருத்தம் பற்றியும் இதன் போது பேசப்பட்டுள்ளது. (செ-11)

## ஐ.நாவுக்கா...

பிரதி தூதுவர் மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கான பிரதித் தூதுவர் ஆகிய பதவிக்கு மிச்சேல் ஜே சிசனின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி பராக ஒபாமா கடந்த ஜூலை மாதம் பரிந்துரைத்திருந்தார்.

இந்நிலையில், இவரது நியமனத்துக்கு அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து, மிச்சேல் சிசன் விரைவில் புதிய பதவியைப் பொறுப்பேற்பார் என்று தெரியவருகிறது.

2012ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மிச்சேல் சிசன், இலங்கை அரசாங்கத்துடன் கடும போக்கை கடைப்பிடித்து வந்ததால், இலங்கை அரசாங்கத்தின் கடுமையான விமர்சனத்துக்கு உட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**Join Sri Lanka's #1 ESOFT**

*Shaping Lives, Creating Futures.*

**Vacancies @ ESOFT**

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people

Positions are available in Jaffna Campus & Kilinochchi

**Lecturers in IT**

- Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
- Working week will be 5 and a Half days including week end
- Experience would be an added advantage

**Marketing Executive**

- Result oriented individual with strong communication skills
- Willing to travel and meet clients
- identify potential markets to promote company products
- implementing, engage and monitoring promotional activities for the branch
- Assist to achieve branch monthly targets

**Admin - Coordinator | Kilinochchi**

We are looking for goal oriented, energetic young candidates to work at ESOFT. An IT graduate with the capability to lead a team.

Main Responsiblities are handling of local market campigns, general administration, achieving branch targets, ensuring quality delivery of programmes and effective utilisation of staff.

Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

Sucessful candidate will receive a good take home salary. Additional earnings via paid lecturers.

**How to Apply**

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**ESOFT METRO CAMPUS**

137, K.K.S Road, Jaffna, Sri Lanka

Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308

Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk


## பல்கலை மாண...

மாவீரர் தினம் தொடர்பான சுவர் ஒட்டிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒட்டப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரிவில் கல்விகற்கும் க.நிவாஸ் என்ற மாணவனின் நீர்வேலி வீட்டிற்கு நேற்றிரவு 7 மணியளவில் சென்ற புலனாய்வாளர்கள் குறித்த மாணவன் தொடர்பாக விசாரணை நடத்தியதுடன் அவரை கைதுசெய்ய முற்பட்டுள்ளனர்.

எனினும் பிரஸ்தாப மாணவன் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் மாணவனின சகோதரனை குறித்த நபர்கள் விசாரணை எனக்கூறி அழைத்துச் சென்றதாக தெரியவருகின்றது (செ-4)

## எனது அரசி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் நேற்று மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பொதுவேட்பாளராக அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க முயற்சித்த போதும் அதற்கான ஒப்புதல் எமக்கு கிடைக்கவில்லை.

சுமார் 9 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்ற சொந்த வீட்டின் ஊடாக அரசியலில் பிரவேசித்துள்ளேன்.

நான் மீண்டும் அரசியலில் பிரவேசிப்பது எனது பிள்ளைகளுக்கு விருப்பமில்லை. எம்மை மகிந்த கொன்று விடுவார் என்று அவர்கள் அச்சப்படுகின்றனர்.

எனினும் நாட்டுக்காக தமது கட்சியினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க நான் முன்வந்துள்ளேன்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நியமித்துள்ளமையானது அரசியலில் முக்கியமான திருப்பம். அவரை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் நியமிக்கவுள்ளோம்.

இலங்கையில் நீதிமுறை இன்று வீழ்ந்து போயுள்ளது. பொலிஸ்துறை பக்கச்சார்பானதாக மாறியுள்ளது. பழிவாங்கும் ஆட்சியாளர் ஒருவரே நாட்டை ஆட்சி செய்து வருகின்றார்.

எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டவர்களின் வீடுகள், வாகனங்கள், பாதுகாப்புகள் அனைத்தும் உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். உலகம் மதிக்கும் நாடாக இலங்கையை மாற்றியமைக்க சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் நான் எதிர்பார்க்கவில்லை நாட்டை மீட்டெடுப்பதே எமது நோக்கம் என சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த செய்தியாளர் சந்திப்பை முடித்து விட்டு செல்லும் போது தமது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## மரணதண்ட...

டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையின் கீழ் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும் உள்ளூர் சட்டப்படி மூன்று இலங்கை மீனவர்களுக்கும் இன்னும் மரணதண்டனை தீர்ப்பு வழக்கில் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (செ-11)

## அமைச்சர்...

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, துமிந்த திஸாநாயக்க, ராஜித சேனாரட்ன, எம்.கே.டி.எஸ் குணவர்தன ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த அமைச்சர்கள் முன்னதாகவே தமது பதவிகளை ராஜினாமா செய்யும் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-11)

## த.தே.கூ அவசரமாக முடிவெடுக்காது

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு நிலைமைகளை ஆராய்ந்தே முடிவெடுக்கும் என்று அந்த அமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன அவர்கள் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையும், தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அவரது செவ்வியையும் தான் கேட்டதாகக் கூறிய சம்பந்தன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக அவர் கூறிய சில அம்சங்களை வரவேற்ற போதிலும், அவை குறித்தும், யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்தும் தமது கட்சியே ஆராய்ந்து முடிவெடுக்கும் என்றும் கூறினார். (செ-11)

## ஜனாதிபதி...

இதனை கொழும்பில் நடைபெற்ற விடேச செய்தியாளர் மாநாட்டில் அவரே பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தில் சுகாதாரத்துறை அமைச்சராகப் பணியாற்றிய அவர், அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைகள் அதிகாரத் துஷ்பிரயோகம் என்பவற்றினால் வெறுப்படைந்து அரசாங்கத்தில் இருந்து விலகியுள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகி பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு, தான் விருப்பம் தெரிவித்திருந்ததையடுத்து, எதிரணியினர் தன்னை பொது வேட்பாளராகத் தெரிவு செய்திருப்பதாக அவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர் ராஜித சேனாரத்ன, துமிந்த திஸாநாயக்க, ரஜீவ விஜேசிங்க, எம்.கே.டி.எஸ் குணவர்தன உள்ளிட்ட அரசியல்வாதிகளும் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொண்டுள்ளனர்.

இதேவேளை தான் பதவியேற்று நூறு நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவேன் என்று எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

இதற்கான மக்கள் ஆணை ஏற்கெனவே தனது கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதே விடயம் கடந்த கால ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கைகளிலும் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 18-வது திருத்தம் நீக்கப்படுவதுடன் 17-வது திருத்தம் மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அடுத்து அமையவிருக்கும் ஆட்சியில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்பார் என்றும் அவர் கூறியுள்ளார். (செ-11)

## மன்னிப்பு கோரி...

ள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் 18-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஆதரவளித்தமைக்காக வருந்துவதாகத் ராஜித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டுவார் என்பதில் சந்தேகம் கிடையாது.

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்துடன் எமக்கு தனிப்பட்ட குரோதங்கள் எதுவும் கிடையாது. பண்டாரநாயக்க போன்றதொரு அஹிம்சை வாத தலைவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய தேர்தல் முறைமையின் ஊடாக ஊழல் பேர்வழிகளே உருவாகின்றார்கள். இந்த நாடு ஊழலால் எங்கே செல்கின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது.

உயிரைப் பணயம் வைத்து ஆளும் கட்சியை விட்டு விலகியுள்ளேன், ஊடகவியலாளர்கள் நிதானமாக கருத்துக்களை வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அ.கோ. ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org